அறிவு விளக்க வாசகம்



மூன்றாம் புத்தகம்

159

159
2-56

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 APR 1956
MADRAS

TB
031(3)
N56.
147176.

அறிவு விளக்க வாசகம்

மூன்ரும் புத்தகம்

செலாங்கூர் சமஸ்தானம்
கோலாலம்பூர், கோல சிலாங்கூர் ஜில்லாக்களிலுள்ள
இந்திய பள்ளிக்கூடங்களின் ரிட்டையர்டு
உதவிப் பரீட்சாதிகாரி
அ. இராமாநுஜாசார்யர்
எழுதியது.

மாக்மில்லன் அண்டு கம்பெனி, லிமிடெட்
மதராஸ் பம்பாய் கல்கத்தா லண்டன்
1956

மாக்மில்லன் அண்டு கம்பெனி லிமிடெட்
லண்டன் பம்பாய் கல்கத்தா மதராஸ் மெல்போர்ன்
தி மாக்மில்லன் கம்பெனி
அட்லாண்டா ஸான்பிரான்ஸிஸ்கோ
தி மாக்மில்லன் கம்பெனி ஆப் கனடா லிமிடெட்
டொரான்ட்டோ

பதிப்புரிமை

ஆரும் பதிப்பு 1956

MADE AND PRINTED AT THE I. S. S. D. PRESS, MADRAS 2.

முன்னுரை

"அறிவு விளக்க வாசகம்" எனப் பெயரிய இப்பாட புத்தகங்கள் பொதுவாகத் தமிழ்ப் பள்ளிக்கூடங்களிற் பயின்றுவரும் சிறுவர்கட்கும், சிறுமியர்கட்கும், சிறப்பாக மலாய் நாட்டின் கண்ணுள்ள இந்திய குழந்தைகட்கும் பயன்படுமாறு, வித்தியாபகுதியார்களின் பாடத்திட்டங் களைத் தழுவி எழுதப் பெற்றவையாகும். தமிழ்ச் சிறுவர் சிறுமியர்களின் தேவைக்கும் தேர்ச்சிக்கும் உகந்த பொருள் களை ஆய்ந்தெடுத்துப் பைந்தமிழ் வளர்ச்சியை நல்கும் வகையில் இவை எழுதப்பட்டுள்ளன. மாணவர்கட்கும் ஆசிரியர்கட்கும் உபயோகமாகும் முறைகளே இவைகளிற் கையாளப்பட்டிருப்பது புலனுகும். போதிய அளவில் சித்திரங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

எஞ்ஞான்றும் என்மீது அன்பு காட்டிப் பேராதரவு செய்துவரும் நுண்மாண் நுழைபுலமை மிக்க துரைமகனுர் Mr. H. L. Hodge, B. A. (Hons.), (London); M. R. S. T., Asst. Director of Education (Indian), Malaya அவர்கட்கு நன்றியறிதலுடன் கூடிய எனது தாழ்மையான வணக்கத் தைச் செலுத்துகின்றேன். எம் துரைமகனுர் ஆற்றியுள்ள நன்றி எழுமை எழுபிறப்பும் உள்ளும் தன்மைத்தேயாம்.

தாய்மொழிப் பற்றும், தொழில் ஆர்வமும் மிகுந்துள்ள ஆசிரியர்களும், வித்தியார்த்திகளும் இப்பாட புத்தகங்களை ஆதரவுடன் ஏற்று, எனக்கு ஊக்கம் அளிப்பார்கள் என நம்புகிறேன்.

கோலாலம்பூர்,
20-6-1947.

அ. இராமாநுஜாசார்யன்

பொருளடக்கம்

பாடம்				பக்கம்
1.	நாம் வசிக்கும் நாடு	...	...	5
2.	தாயும் தகப்பனும்	...	...	7
3.	அறிவிற் சிறந்த மன்னன்	...	...	8
4.	மயிலும் மானும்	...	...	9
5.	வீடு	...	...	11
6.	கிளியும் குயிலும்	...	...	13
7.	அபுபக்கர்	...	...	15
8.	தென்னை	...	...	17
9.	ரெயில் வண்டி	...	...	19
10.	போலீஸ்காரன்	...	...	21
11.	சாலை விதிகள்	...	...	24
12.	பாஞ்சாலி	...	...	28
13.	குரங்கு	...	...	30
14.	குரங்கின் கதை	...	...	32
15.	சூரியன்	...	...	34
16.	பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரம்		...	37
17.	ஏழைச் சிறுவன்	...	...	40
18.	வாழை	...	...	42
19.	தொழிலாளிகள்	...	...	43
20.	யானை	...	...	45
21.	நல்லொழுக்கம்	...	...	48
22.	தருமபுத்திரன்	...	...	49
23.	வயற்புறம்	...	...	52
24.	தெனாலி இராமன்	...	...	54
25.	கடற்கரை	...	...	55
26.	சிறகு ஒடிந்த சிறு பட்சி	...	...	58
27.	கடிகாரம்	...	...	60
28.	ஒரு புத்திசாலி	...	...	64
29.	விளையும் பயிர் முளையிலே தெரியும்		...	67
30.	கோலாலம்பூர்	...	...	71
31.	தேனீக்கள்	...	...	76
32.	மீன்	...	...	79
33.	வெந்நீர் ஊற்று	...	...	83
34.	தபாலாபீசு	...	...	86
35.	விடுகதை	...	...	92

1. நாம் வசிக்கும் நாடு

அரும்பதம் :—

சூழ்ந்திருக்கிறது	பள்ளத்தாக்கு	புற்றரை
உலோகம்	வாணிபம்	ஒற்றுமை

இது நாம் வசிக்கும் நாட்டின் படம். இதற்கு மலாயா என்று பெயர். இத்தேசத்திற்கு வடக்கே தாய்லாந்து என்னும் சீய

நாடு இருக்கிறது. இதனுடைய மற்ற மூன்று பக்கங்களிலும் கடல் சூழ்ந்திருக்கிறது.

மலாயாவில் மலைகளும், பள்ளத்தாக்குகளும் மிகுதியாக உண்டு. எங்கே பார்த்தாலும் செடிகொடிகளும், பசும் புற்றரைகளும் காணப்படும்.

இங்கே உஷ்ணம் அதிகம். அதைப் போலவே மழையும் அதிகம். ஒவ்வொரு மாதத்திலும் மழை பெய்யும்.

தென்னையும் ரப்பரும் இந்நாட்டில் ஏராளமாகப் பயிராகின்றன. ஈயமும் தங்கமும் இங்குள்ள உலோகங்கள். இது கைத்தொழிலும் வாணிபமும் செழித்தோங்கும் நாடு.

நாம் இங்கே உழைப்போம். இங்கு வசிப்பவர்களுடன் ஒற்றுமையோடு கூடி வாழ்வோம். இந்நாட்டின் செல்வத்தைப் பெருக்குவோம்.

செய்யுள் :—

திரை கடலோடியுந் திரவியந் தேடு

பயிற்சி :—மலாயாவின் எல்லைகள் எவை?

மலாயாவில் கிடைக்கும் உலோகங்கள் எவை?

மலாயாவில் நீங்கள் எவ்வாறு வாழ வேண்டும்?

2. தாயும் தகப்பனும்

அரும்பதம் :—

ஒப்பானவர் இணை பரிவு சிகிச்சை
பொருள் நாட்டம் நலன் மனங்குளிர்தல்

நம்மைப் பெற்றெடுத்தவர்கள் தாயும் தகப்பனும். அவர்கள் தெய்வங்களுக்கு ஒப்பானவர்கள்.

தாய் நம்மிடம் அன்புள்ளவர். அவருடைய அன்பிற்கு இணையே இல்லை. தாய் நமக்குப் பரிவுடன் உணவு ஊட்டி வளர்க்கின்றார். நாம் படிப்பதையும், பேசுவதையும், விளையாடுவதையுங் கண்டு மனங் குளிர்கின்றார். நமக்கு நோய் வந்தால், மனம் வருந்திப் பல சிகிச்சைகள் செய்கின்றார்.

தகப்பனும் நம்மிடம் அன்புள்ளவர். அவர் நம்மைக் காப்பாற்ற வேலை செய்து பொருள் சம்பாதிக்கின்றார். நமது உணவிற்கும், உடைக்கும், கல்விக்கும் பணத்தைச் செலவு செய்கின்றார். நம்முடைய நலனில் நாட்டமுள்ளவராக இருக்கின்றார்

நாம் நம்முடைய தாயையும் தகப்பனையும் ஒரு நாளும் மறக்கக் கூடாது. ஒவ்வொரு நாளும் அவர்களை வணங்க வேண்டும். அவர்களுடைய சொற்படி நடக்க வேண்டும். அவர்களுடைய மனம் வருந்தும்படி ஒரு காரியமும் செய்யக் கூடாது.

செய்யுள்: —

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

பயிற்சி:—தாய் நமக்கு என்ன செய்கிறார்?
தகப்பன் என்ன செய்கிறார்?
நாம் அவர்களிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?

3. அறிவிற் சிறந்த மன்னன்

அரும்பதம்:—

மன்னன் செயற்கை நீதி பேரும் புகழும் ஏற்றத்தாழ்வு இயற்கை சுட்டிக்காட்டுதல்

பல ஆண்டுகளுக்கு முன்னர் எருசலத்தில் ஒரு மன்னன் இருந்தான். அவன் மிகவும் புத்திக்கூர்மையுள்ளவன். அவன் தன் குடிகளை நீதியுடன் ஆண்டுவந்தான். ஆகையால், அவனுடைய பேரும் புகழும் நாடெங்கும் பரவிற்று.

ஒரு நாள் அவனுடைய அரண்மனைக்கு ஒருவர் வந்தார். அரசனின் புத்திக்கூர்மையைச் சோதிக்கவே அவர் வந்தார். சற்று தூரத்தில் இரண்டு புஷ்பக் கொத்துக்களை வைத்தார். அவற்றில் எது இயற்கையானது, எது செயற்கையானது என்று கேட்டார். அவைகள் ஏற்றத் தாழ்வில்லாமல் இருந்தன.

அரசன் பார்த்தான். வித்தியாசத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சிறிது நேரம் உற்று நோக்கினான். ஒரு கொத்தின் அருகில் தேனீக்கள் பறந்து வருவதைக் கவனித்தான்.

உடனே, அதைச் சுட்டிக்காட்டி "இது இயற்கையானது" என்ருன். மற்றது செயற்கை என்பது தெளிவாயிற்று. செயற்கைப் பூவில் தேன் இருக்காது. ஆகவே, தேனீயும் அதனிடம் வராது. இதை உணர்ந்தே மன்னனும் உண்மையை அறிந்து சொன்ஞன். சோதனை செய்ய வந்தவரும் அரசனின் திறமையை வியந்து தம் இருப்பிடம் சென்ருர்.

செய்யுள் :—

எண்ணுமெழுத்துங் கண்ணெனத் தகும்

பயிற்சி :—அரசன் பூக்களின் வித்தியாசத்தை எப்படிக் கண்டு பிடித்தான் ?

4. மயிலும் மானும்

அரும்பதம் :—

பொன்மை	கார்மேகம்
ஆனந்தம்	வாழும்

பக்ஷிகளில் எல்லாம் மிக அழகுள்ளது மயில். மயில் காடுகளிலும் வீடுகளிலும்

வசிக்கும். மயிலுக்குச் சிறிய தலையும், பருத்த உடலும், நீண்ட தோகையும் உண்டு. அதன் தலையில் கொண்டை உண்டு. அது நீலம், பச்சை, பொன்மை ஆகிய நிறங்கள் கலந்த பறவை. ஆண் மயிலுக்கு தோகை உண்டு. பெண் மயிலுக்கு தோகை இல்லை. கார் மேகத்தைக் கண்டதும், ஆண் மயில் ஆனந்தம் அடைந்து தன் தோகையை விரித்து ஆடும். அது பார்ப்பதற்கு மிக அழகாய் இருக்கும். பறவைகளுக்கு இராணி என்று மயிலைச் சிறப்பித்துக் கூறுகிறார்கள்.

மான் காட்டில் வாழும் நாற்கால் பிராணி. காட்டில் மான் கூட்டங் கூட்டமாய் வசிக்கும். அதன் தலையில் கொம்புகள் உண்டு. மானின் கொம்புகள் நீண்டு பல பிரிவுகளுடன் இருக்கும். மான் வேகமாய் ஓடும். மான் மிகவும் பயமுள்ளது. மான் வேட்டையாட மனிதர்கள் காட்டிற்குச் செல்லுவார்கள்.

செய்யுள் :—

ஏவா மக்கண் மூவா மருந்து

பயிற்சி :—பறவைகளின் இராணி என்று எதற்குப் பெயர் ?

மயிலின் நிறம் என்ன ?

மான் எங்கே வசிக்கும் ?

மனிதர்கள் காட்டிற்குச் சென்று என்ன செய்வார்கள் ?

5. வீடு

அரும்பதம் :—

ஊடே கம்பாங் ஊன்றி அத்தாப்பு
கதலி கமுகு பெருமை பாங்குடன்

இது மலாய்க்காரரின் வீடு. மலாய்க்காரர்கள் தோட்டங்களின் ஊடே பலகை வீடுகளில் வசிப்பார்கள். சில வீடுகளின் கூட்டத்திற்கு கம்பாங் என்று சொல்லுவார்கள். கம்பாங் என்றால் கிராமம் என்று பொருள். கம்பாங்கில் வீடுகள் வரிசையாக இராது. அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கும். ஒவ்வொரு வீட்டைச் சுற்றிலும் தோட்டம் உண்டு.



படத்திலுள்ள வீட்டைப் பார். அது எளிமையும் அழகும் பொருந்தி இருக்கிறது. தரையில் உயரமான மரத்தூண்கள் ஊன்றி இருக்கின்றன. அவைகளின்மேல், வீடு பலகைகளால் கட்டப்பட்டிருக்கிறது. வீட்டின் கூரை தென்னங் கிடுகு போன்ற அத்தாப்பால் ஆனது. வீட்டினுள்

சில அறைகள் உண்டு. முன் அறையில், வீட்டுக்கு வருகிறவர்களைச் சந்தித்துப் பேசு வார்கள். பின் அறையில் சமையல் செய்வார்கள். பக்கத்திலுள்ள அறையில் படுத்து உறங்கு வார்கள். மலாய்க்காரர் வீட்டைச் சுத்தமாய் வைத்திருப்பார்கள்.

வீட்டைச் சுற்றித் தோட்டமும் வேலியும் உண்டு. மலாய்க்காரர் பயிர்த் தொழில் செய் வார்கள். அவர்கள் தோட்ட வேலை செய் வதில் பெருமையுள்ளவர்கள். கதலி, கமுகு, தென்னை, மா, பலா முதலிய மரங்களையும், ரோஜா போன்ற புஷ்பச் செடிகளையும் பழச் செடிகளையும் பாங்குடன் பயிரிடுவார்கள்.

செய்யுள் :—

ஔவியம் பேசுதலாக்கத்திற் கழிவு

பயிற்சி :—கம்பாங் என்பது என்ன?
மலாய்க்காரரின் வீடு எதனால் செய்தது ?
வீட்டைச் சுற்றி என்ன இருக்கிறது ?
தென்னை மரத்தின் படம் எழுது.

6. கிளியும் குயிலும்

அரும்பதம் :—

உறுதி	தோன்றும்	இனிமை
பஞ்சவர்ணம்	ஒப்பு	குரல்

கிளி அழகு மிகுந்த பக்ஷி. அதன் உடம்பு முழுவதும் பச்சை நிறமாயும், அலகு மாத்திரம் சிவப்பு நிறமாயும் இருக்கும். கிளியின் அலகு வளைந்து கூர்மையாய் இருக்கும். அதன் கால்களில் முன்னால் இரண்டும் பின்னால் இரண்டும் ஆக நான்கு விரல்கள் உண்டு. விரல்களில் நீண்ட கூர்மையான நகங்கள் காணப்படுகின்றன. இவ்விரல்களால் கிளி மரக்கிளைகளை உறுதியாகப் பிடித்துக் கொள்ளும்.

கிளி காட்டில் கூட்டங் கூட்டமாய் வசிக்கும். மனிதர்கள் கிளியைப் பிடித்துக் கூட்டில் அடைத்து வீட்டில் வளர்ப்பார்கள். அது பழம், சோறு முதலியவற்றைத் தின்னும். கிளியில் பலவகையுண்டு. அவைகளில் பஞ்சவர்ணக்கிளி மிக அழகுள்ளது. பஞ்சவர்ணக்

கிளி வெள்ளை, கருப்பு, பச்சை, மஞ்சள், சிவப்பு என்னும் ஐந்து நிறங்களுடன் தோன்றும். பேசக் கற்றுக் கொடுத்தால் அது பேசும். பெண்களில் அழகுள்ளவர்களைக் கிளிக்கு ஒப் பிடுவார்கள்.

குயில் கருமை நிறமுள்ள பக்ஷி. குயில் உருவில் சிறியது. அழகில் கிளிக்கு ஒப்பான தல்ல. காட்டிலுள்ள மரக்கிளைகளில் குயில்



வசிக்கும். குயிலின் குரல் மிக இனிமையானது. குயில் நன்றாய்ப் பாடும். மனிதர்களில் இனிமை யாகப் பாடுகிறவர்களைக் குயிலுக்கு இணையாகச் சொல்லுவார்கள்.

செய்யுள் :—

கிட்டாதாயின் வெட்டென மற

பயிற்சி :—கிளியின் அலகு எப்படி இருக்கும்?
கிளி என்ன தின்னும் ?
குயிலின் நிறம் என்ன ?
கிளியின் படம் எழுது.

7. அபு பக்கர்



அரும்பதம் :—

பெற்ருர் தொலேவு எளியவர் துப்புரவு
சிவித்தல் மரியாதை பொய் களவு

படத்தில் இருக்கும் சிறுவன் யார்? அவன் ஒரு மலாய்ச் சிறுவன். அவன் காலே யில் எழுந்து கை, கால், முகம் கழுவி, பல் விளக்கிய பிறகு பள்ளிக்கூடம் போகிருன்.

அவனுடைய பெயர் அபு பக்கர். அவன் கம்பாங் பாருவில் ஒரு சிறு வீட்டில் வசிக்கிறுன்.

அவனுடைய பெற்ருர் மிகவும் எளியவர்கள். ஆகையால், வெகு தொலைவிலுள்ள பள்ளிக்கூடத்திற்கு அவன் நடந்து போகிருன்.

எட்டு மணியளவில் பள்ளிக்கூடம் போய்ச் சேருவான். அரைமணி நேரம் தேகப்பயிற்சி அல்லது தோட்ட வேலை செய்வான். பின்பு, பாடம் படிப்பான்; எழுதுவான். கணக்குச் செய்வான். தன்னுடைய புத்தகங்களையும் வேறு பொருள்களையும் அழுக்கில்லாமல் துப்புரவாய் வைத்துக் கொள்ளுவான்.

அபு பக்கர் ஒரு நல்ல பிள்ளை. பொய் சொல்ல மாட்டான். களவு செய்யான். கெட்ட வார்த்தைகள் சொல்லான். எல்லாரிடமும் அன்பாயும் மரியாதையாயும் இருப்பான்.

செய்யுள் :—

கீழோராயினும் தாழவுரை

பயிற்சி :— *அபு பக்கர் யார் ?*

அவன் ஏன் பள்ளிக்கூடத்திற்கு நடந்து போகிருன் ?

பள்ளிக்கூடத்தில் அவன் என்ன செய்வான் ?

ஏன் அவனை நல்ல பிள்ளை என்று சொல்ல வேண்டும் ?

8. தென்னை



அரும்பதம் :—

ஓங்கி	மணற்பாங்கான		விசேஷம்
அடி	நுனி	பாளை	குரும்பை

தென்னை ஓங்கி வளரும் மரங்களில் ஒன்று. அது மணற்பாங்கான நிலத்தில் நன்ருய்ப் பயிராகும். இம் மலாய் நாட்டில் தென்னை விசேஷமாய்ப் பயிர் செய்யப்படுகிறது.

தென்னை மரங்களின் கூட்டத்திற்குத் தென்னந் தோப்பு என்று பெயர். தென்னை மரத்துக்கு ஆணிவேர் இல்லை. சல்லி வேர் மட்டும் உண்டு. அதன் அடிமரம் பருத்தும் நுனி மரம் சிறுத்தும் இருக்கும். அதற்குக் கிளைகள் இல்லை. மரத்தின் உச்சியில் மட்டை கள் உண்டு. ஒவ்வொரு மட்டையிலும் நடு நரம்பு இருக்கிறது. அதிலிருந்து இரண்டு பக்கங்களிலும் ஓலைகள் பிரிந்து செல்லுகின் றன. ஓலையிலும் சிறு நரம்பு உண்டு. அதற்கு ஈர்க்கு என்று பெயர்.

தென்னை மட்டைகளின் ஊடே பாளைகள் தோன்றும். பாளை வெடித்ததும் பூக்கள் பூக்கும். தென்னம் பூவிற்கு மணம் இல்லை. பூவிலிருந்து பிஞ்சு உண்டாகும். அதற்குக் குரும்பை என்று பெயர். குரும்பை முற்றினல் இளநீரும், இள நீர் முற்றினல் தேங்காயும் ஆகும்.

தேங்காயின் மேற்புறத்தில் இருப்பது நார். அதை உரித்து எடுக்கலாம். நாரின் கீழ் தடித்த ஓடு உண்டு. அதைக் கொட்டங்கச்சி என்பார் கள்.

தென்னையில் பலனற்ற பாகமே இல்லை. அதனுடைய அடிமரம் தூண், ஏற்றம், விட் டம், முதலியன செய்ய உதவுகிறது. அதன் மட்டை கிடுகு செய்யவும், அடுப்பெரிக்கவும் உதவும். இளநீர் குடிக்க உதவும். தேங்காயி

னுள் இருக்கும் பருப்பு கறி சமைக்கவும், எண்ணெய் எடுக்கவும் பிரயோசனப்படுகிறது. நாரினுல் கயிறு திரிக்கலாம். கொட்டங்கச்சி அகப்பை செய்ய உதவும்.

செய்யுள் :—

குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை

பயிற்சி :—தென்னை எங்கே விசேஷமாகப் பயிராகும்?
தென்னையின் உபயோகம் என்ன?
தென்னை மரத்தின் படம் எழுது.

9. ரெயில் வண்டி



அரும்பதம் :—

ஆங்கிலம்	எஞ்சின்	வழங்கலாயிற்று
சமதூரம்	ஸ்டேஷன்	வெப்பம்

ரெயில் வண்டியைப் புகை வண்டி என்றும் சொல்லுவதுண்டு. ரெயில் என்பது ஆங்கில மொழி. அதன் பொருள் தண்டவாளம் என்பது. தண்டவாளத்தின் மேல் ஓடுவதால் அதற்கு அப்பெயர் வழங்கலாயிற்று. குப், குப், என்று புகை விட்டுக்

கொண்டு போவதாலும் புகை வண்டி என்ற பெயர் ஏற்பட்டது.

புகை வண்டி சமதூரத்தில் பதித்துள்ள தண்டவாளங்களின் மேல் ஓடும். தரையில் ஓடாது. அது மிகவும் பளுவானதாலும், வேகமாய் ஓடுவதாலும் தரையின் உறுதி அதற்குப் போதாது. அதன் சக்கரங்கள் தரையில் பதிந்து கொள்ளும். அதனுலேயே தண்டவாளங்களின் மேல் புகை வண்டியை ஓட்டிச் செல்லுகிருர்கள்.

புகை வண்டி நீராவியின் உதவியால் ஓடுகிறது. இது பல வண்டிகளின் தொடர். சுமார் பத்து வண்டிகள் வரை இதில் சேர்க்கப்பட்டிருக்கும். இதனை இழுத்துக்கொண்டு ஓடும் வண்டிக்கு எஞ்சின் என்று பெயர். அதில் ஒரு பெரிய அடுப்பும், தண்ணீர்த் தொட்டியும், இயந்திரத்தின் பல பாகங்களும் உண்டு.

தண்ணீர்த் தொட்டியில் அடிக்கடி தண்ணீர் ஊற்றி நிரப்புவார்கள். தண்ணீர்த் தொட்டியிலிருந்து பல குழாய்களில் தண்ணீர் அடுப்புக்குச் செல்லும். அடுப்பு எப்பொழுதும் எரிந்துகொண்டே இருக்கும். அடுப்பின் வெப்பம் குழாய்களிலுள்ள நீரை ஆவியாக மாற்றும். நீராவி முழுவதும் தனி அறையில் போய்ச் சேரும். அந்நீராவி அறையில், சக்கரத்

தோடு இணைக்கப்பெற்ற தடி முன்னும் பின்னும் சென்று சக்கரத்தை உருட்டி ஓடச்செய்யும்.

ரெயில் வண்டி வந்து நிற்கும் இடத்திற்கு ஸ்டேஷன் என்று பெயர். அங்கே பல உத்தியோகஸ்தர்கள் இருப்பார்கள். பிரயாணம் செய்யும் பல மனிதர்களை அங்கே காணலாம்.

செய்யுள் :—

கேட்டில் உறுதி கூட்டுமுடைமை

பயிற்சி :—ரெயில் வண்டி என்று ஏன் பெயர் வந்தது?
புகை வண்டி என்று சொல்லக் காரணம் யாது?
ரெயில் வண்டி எதன் உதவியால் ஓடுகிறது?

10. போலீஸ்காரன்

அரும்பதம் :—

நாற்புறம்　　அவசரம்　　விபத்து

அப்பா :—ரெங்கா! அதோ நிற்பவன் யார் தெரியுமா?

ரெங்கன்:—எனக்குத் தெரியாது, அப்பா! அவன் யார்? அவன் நம்மைப் போல் உடைதரிக்க இல்லையே!

அப்பா:—ஆம், அவன் ஊர் காவற்காரன். அவனை எல்லோரும் போலீஸ் காரன் என்று அழைப்பார்கள். 'பேதா' என்றும் சொல்லுவார்கள். அவன் தலையில் பாகை அணிந்திருக் கிறான். அரைக் காற் சட்டையும், முழுக்கை மேற்சட்டையும் போட் டிருக்கிறான். மிகவும் உறுதியான கருப்புச் சப்பாத்து அணிந்திருக் கிறான்.

ரெங்கன்:—நல்லது, அப்பா. அவன் ஏன் இங்கே நிற்கிறான்?

அப்பா:—குழந்தாய்! அவன் நிற்கும் இடத் தைக் கவனித்துப்பார். அது சாலை கள் கூடுமிடம். நாற்புறங்களிலிருந் தும், மனிதர்களும், மோட்டார் வண்டிகளும், பைசைகிள் வண்டி களும் செல்வதைப் பார். அவசரத் தில் ஒருவரை ஒருவர் பாராமல் மோதிக்கொள்ள நேரிடும். அதனால் விபத்து உண்டாகும்.

ரெங்கன்:—அப்பா! அதற்கு அவன் என்ன செய்வான்?

அப்பா :—சொல்கிறேன் கேள். அவன் ரஸ்தாவின் மத்தியில் நின்றுகொண்டு சைகை காட்டி, வண்டிகளை நிறுத்தி, ஒன்றின் பின் ஒன்ருகப் போகும்படி திட்டம் செய்வான். வண்டியோட்டிகள் கவனத்தோடு செல்லுவார்கள். விபத்து நேரிடாது.

ரெங்கன் :—தோள்களில் பின்புறமாக ஒரு கட்டையை மாட்டிக் கொண்டிருக்கிருனே ! அது எதற்கு ?

அப்பா :—ஆம்! அது தான் அடையாளமாக உதவுகிறது. 'வராதே,' 'நில்,' என்று அது சொல்லுவதுபோல இருக்கிறது. இப்பொழுது அவனுடைய முன் பக்கத்திலிருந்தும், பின் பக்கத்திலிருந்தும் வருகிற வண்டிகள் நின்றுவிடவேண்டும். அவனுடைய வலக்கைப் பக்கத்திலிருந்தும் இடக்கைப் பக்கத்திலிருந்தும் வரும் வண்டிகள் நிற்காமல் போகலாம். சிறிது நேரத்திற்கு ஒருதரமாக அவன் கைகளை மேலே உயர்த்தி திரும்பிக்கொண்டே இருப்பான்.

ரெங்கன் :—அநேக வந்தனம். அப்பா! இப்போது தெரிந்துகோண்டேன்.

செய்யுள் :—

கைப்பொருடன்னின் மெய்ப்பொருள் கல்வி

பயிற்சி :—போலீஸ்காரன் அணிந்திருக்கும் உடையைப் பற்றிக் கூறு.

அவன் செய்யும் வேலை யாது ?

11. சாலை விதிகள்

அரும்பதம் :—

விதிகள் தடுமாறுதல் அடையாளம்

குழந்தாய்! இன்று உனக்கு அவசியமான சில சாலை விதிகளைப்பற்றிக் கூறுகிறேன் கேள்.

1. சாலையில் நடக்கும் போதெல்லாம் இடது பக்கமாக நடந்து செல். சாலையின் மத்தியில் போகாதே.

2. சாலையைக் கடந்து குறுக்கே போக நேரிடும்போது, ஓரத்தில் நின்று வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் பார். வண்டிகள் போகும் வரைக்கும் காத்திரு. பிறகு மெதுவாகவும் கவனமாகவும் நடந்து செல். அவசரப்பட்டு ஓடாதே, பயப்படாதே. தடுமாருதே. ஒரே தீர்மானத்துடன் போ.

3. வழியே போய், வழியே வா.

4. சாலையில் விளையாடாதே, சண்டையிடாதே, வேடிக்கை பார்க்காதே.

சாலையின் ஓரங்களில் அடையாளங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை நீ

பார்த்திருக்கிறாயா? அவைகளில் சில பின் வருமாறு:—



இது ஒரு அடையாளம். சாலைகள் குறுக்கிடுகின்றன என்பது இதன் பொருள்.



சாலைகள் சந்திக்கும் இடங்களில் இந்த அடையாளம் இருக்கும். இதன் பொருள்:—"இங்கே நில், அக்கம்பக்கம் பார், வண்டிகளுக்கு வழி விடு, பிறகு போ."

இந்த அடையாளம் பள்ளிக் கூடம் அருகாமையில் இருக்கிறது என்பதைத் தெரிவிக்கிறது. "குழந்தைகள் நடமாடக் கூடும். கவனமாய் பார்த்துப் போ" என்பது இதன் அர்த்தம்.

இந்த அடையாளம் ஆஸ்பத்திரியின் பக்கத்தில் வைக்கப் பட்டிருக்கும். இதன் பொருள் "நோயாளிகள் உள்ள இடம். கவனமாய்ப் போ" என்பதாம்.



இது இன்னொரு அடை யாளம். சாலை வளைந்து செல்லு கிறது என்பது இதன் கருத்து.



இந்த அடையாளம் நான்கு சாலைகள் ஒன்று சேருமிடத்தில் இருக்கும். பாதையின் வழியே இடது பக்கமாகச் சுற்றிப் போ என்பதை இது அறிவிக்கிறது.

12. பாஞ்சாலி

அரும்பதம் :—

விவாகம்	வீழ்த்து	வெட்கம்
செய்விக்க	மணம்	தேர்ச்சி
சுயம்வரம்	ஏந்தி	நொடி

பல ஆண்டுகளுக்கு முன்பு, பாரத நாட்டில் பாஞ்சாலம் என்று ஒரு தேசம் இருந்தது அத்தேசத்து மன்னனுக்கு அழகிலும் குணத்திலும் சிறந்த மகள் ஒருத்தி இருந்தாள். அவளுக்கு திரௌபதி என்று பெயர். பாஞ்சால மன்னன் மகள் ஆகையால் அவளைப் பாஞ்சாலி என்றும் அழைப்பார்கள்.

பாஞ்சாலி மணப் பருவம் அடைந்ததும் அவளுடைய பிதா அவளை வில்வித்தையில் தேர்ந்த ஒரு அரச குமாரனுக்கு விவாகம் செய்விக்க நினைத்தார். பாஞ்சாலிக்குச் சுயம் வரம் நடத்துவதாக எல்லா அரச குமாரர்களுக்கும் அறிவித்தார். சகல அரச குமாரர்களும் வந்தார்கள். சுயம்வர மண்டபத்தின் மத்தியில் ஒரு குளம் வெட்டுவித்தார். அக்குளத்தில் நிழல் விழும்படி உயரே மீன் உருவம் ஒன்றைக் கட்டும்படி செய்தார். பிறகு அரச குமாரர்களைப் பார்த்து, "யார் குளத்திலுள்ள நிழலைப் பார்த்துக் குறி வைத்து, மேலே கட்டி

யுள்ள மீன் உருவத்தை அம்பெய்து வீழ்த்து கிருரோ, அவரே பாஞ்சாலியை மணப்பார்" என்று சொன்னுர்.

அங்கே கூடியிருந்த அரச குமாரர்கள் எல்லோரும் ஒருவர் பின் ஒருவராகக் கையில் வில்லும் அம்பும் ஏந்தி, முயன்று பார்த்தனர். அவர்களால் முடியவில்லை. அவர்களெல்லோரும் செய்வது இன்னது என்று தெரியாமல் வெட்கத்தால் தலை குனிந்திருந்த சமயம் ஒரு மூலையிலிருந்து ஒருவர் எழுந்து வந்தார். மிகவும் தேர்ச்சியுள்ளவர்போல் அம்பை வில்லில் வைத்தார். குளத்திலிருந்த நிழலைப் பார்த்தார். நொடிப் பொழுதில் வில்லிலிருந்து விலகிய அம்பு மேலே கட்டித் தூக்கியிருந்த மீன் உருவத்தின் மேல் தைத்தது. அரசனும் மற்றவர்களும் சந்தோஷங் கொண்டனர். வில் வீரன் பாஞ்சாலிக்கு மாலையிட்டு மகிழ்ந்தான். அவனே வில்வித்தையில் புகழ் படைத்த அர்ச்சுனன்.

செய்யுள் :—

சூதும் வாதும் வேதனை செய்யும்

பயிற்சி :—பாஞ்சாலி யார்?

அவளை மணந்துக்கொண்டவர் யார்?

அவளை எவ்வாறு மணந்து கொண்டார்?

13. குரங்கு

அரும்பதம்:—

அடர்ந்த வஸ்திரம் ஏறக்குறைய
தக்கபடி ஒத்திருக்கிறது மெதுவாக
தெருத்தெருவாக சாக பட்சிணி இனம்

குரங்கு, மரம், செடி, கொடி அடர்ந்த காடுகளில் கூட்டமாய் வாழும் பிராணி. குரங்கில் பல ஜாதி உண்டு. மிகச் சிறிய உருவத்திலிருந்து ஆறு அடி உயரம் வரையிலும் குரங்கு அதன் இனத்திற்குத் தக்கபடி வளரும்.

குரங்கு உருவத்தில் ஏறக்குறைய மனிதனை ஒத்திருக்கிறது. அதற்குக் கைகள் உண்டு. அதன் உடம்பு முழுவதும் மயிர் அடர்ந்திருக்கும்.

குரங்கு சாக பட்சணி. அது காய் கனி முதலியவற்றையே தின்னும். அதன் வாயின் உட்புறத்தில் பைகள் உண்டு. உணவு கிடைக்கும்போது குரங்கு அவசரமாக வாயில் போட்டுக் கடித்து அப்பைகளில் அடக்கிக் கொள்ளும். பிறகு மெதுவாகத் தின்னும்.

குரங்கு மிகவும் புத்திக் கூர்மை உள்ளது. பிறர் செய்யும் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்து, தானும் அதுபோலச் செய்யும்.

குரங்காட்டி அதைக் குட்டியாயிருக்கும் போதே பிடிப்பான். பிறகு அதற்குப் பல வேடிக்கைகளைப் பழக்கிக் கொடுப்பான். குரங்கைத் தெருத்தெருவாக, அழைத்துக்

கொண்டுபோய் வேடிக்கை காட்டுவான். வேடிக்கை பார்க்கிறவர்கள் அவனுக்கு அரிசி, பழைய வஸ்திரம், காசு முதலியன கொடுப்பார்கள்.

செய்யுள் :—

சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்

பயிற்சி :—குரங்கு எங்கே வசிக்கும் ?
குரங்கு எதைத் தின்னும் ?
குரங்காட்டி என்ன செய்வான் ?

14. குரங்கின் கதை

அரும்பதம்:—

பிரபு	அரைகுறை	தாமதம்	பாவம்
அமர்த்தினர்	ஆப்பு	சடுதி	தச்சர்
உச்சிவேளை	ஆயுதம்	பேரிரைச்சல்	எண்ணி

சில வருஷங்களுக்கு முன்னல் ஓர் ஊரில் ஒரு பிரபு வசித்து வந்தார். அவ்வூருக்கு வெளியே ஒரு காடு உண்டு. அக்காட்டில் பல குரங்குகள் வசித்தன.

அப்பிரபு காட்டின் நடுவில் ஒரு கோயில் கட்ட எண்ணி, கட்டட வேலைக்காரர்களை அமர்த்தினர். அங்கே வேலை செய்ய வந்த தச்சர்கள் மரங்களை ரம்பத்தால் அறுத்துக் கொண்டிருந்தார்கள். தச்சர்கள் வேலை செய்

வதை யெல்லாம் அக்காட்டிலுள்ள குரங்குகள் கவனித்துக்கொண்டிருந்தன.

உச்சி வேளையானதும் தச்சர்கள் தங்களுடைய சாப்பாட்டிற்காகப் போனார்கள். போகும்போது அரைகுறையாய் அறுத்திருந்த ஒரு பெரிய மரத்தின் இடையில் ஆப்பு அறைந்துவிட்டுப் போனார்கள்.

அவர்கள் போனதும் குரங்குகள் யாவும் மரங்களிலிருந்து கீழே இறங்கி வந்து தச்சர்களுடைய ஆயுதங்களைக் கையில் எடுத்து வேலை செய்யத் தொடங்கின.

ஒரு குரங்கு மரப்பிளவிலிருந்த ஆப்பை எடுக்க எண்ணி அதைப் பிடித்து அசைத்தது. அது உறுதியாக இருந்தபடியால் வரவில்லை. அதன்மேல் அக்குரங்கு பிளவில் நன்றாய்

அமர்ந்து ஆப்பைப் பிடித்து அசைத்தது. கடைசியில் ஆப்பு கையோடு வந்தது. வந்தது தான் தாமதம்! பாதி அறுபட்டுப் பிளந்திருந்த மரம் சடுதியில் ஒன்று சேர்ந்தது. பாவம்! குரங்கு இடையில் அகப்பட்டு, நசுங்கிப் பேரிரைச்சலுடன் இறந்தது.

பிறருடைய வேலையில் தலையிடல் ஆகாது.

செய்யுள் :—

தந்தை சொன்மிக்க மந்திரமில்லை

பயிற்சி :—இக்கதையை ஆளுக்குக் கொஞ்சமாகத் தொடர்ந்து சொல்லுக.

15. சூரியன்

அரும்பதம் :— தகடு தெய்வம் மிஞ்சி

மாணிக்கம்:—அக்கா! அதோ ஆகாயத்தில் தங்கத் தகடுபோல் பிரகாசிக்கிறதே! அது என்ன?

மரகதம்:—தம்பீ! அதுதான் சூரியன். நமக்கு வெளிச்சமும் உஷ்ணமும் கொடுக்கும் தெய்வம்.

மாணிக்கம்:—அதன் வடிவம் உருண்டையாகக் காண்கின்றதே!

மரகதம்:—ஆம். அது ஒரு நெருப்புப் பந்து. நாம் வசிக்கும் பூமியைப் பார்க்கிலும் பல மடங்கு பெரியது.

மாணிக்கம்:—சூரியன் இல்லாவிட்டால் என்ன?

மரகதம்:—குழந்தாய்! சூரியன் இல்லாது போனல் உலகமும் இல்லை. நீயும், நானும், மற்ற எல்லா உயிர்களும் இருக்க முடியாது. உயிர் வாழ்வன எல்லாம் ஒளியும் உஷ்ணமும் இல்லாவிட்டால் இறந்து போம்.

மாணிக்கம்:—அப்படியானல், அக்கா! சூரியன் எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

மரகதம்:—தம்பீ! நீ சொல்லுவது சரியல்ல. சூரியன் எப்பொழுதும் பிரகாசித்தால் உஷ்ணம் அளவுக்கு மிஞ்சி விடும். உயிர்கள் யாவும் வரட்சியால் வாடும். ஆகவே, உஷ்ணம் தணிய இரவும் குளிர்ச்சியும் வேண்டுவது அவசியம்.

மாணிக்கம்:— நல்லது அக்கா! இப்பொழுது உண்மை தெரிந்தது.

மரகதம்:— தம்பீ! கடவுளின் மகிமையைப் பார்! உலகத்திலுள்ள பொருள்களைக் கண்டு களிக்கவும், வேலை செய்து பிழைக்கவும் நமக்காகவே அவர் சூரியனைப் படைத்தார். படுத்து உறங்கி அலுப்புத் தீர்த்துக் கொள்ளவும், உஷ்ணத்தைத் தணிக்கவும் இரவையும் குளிரையும் படைத்தார். நமக்குப் பகலும் வேண்டும்; இரவும் வேண்டும். இவ்விரண்டையும் படைத்த கடவுளின் பெருமையை எண்ணி அவரை வணங்குவோம். வா.

செய்யுள் :—

தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை

பயிற்சி:— சூரியன் நமக்கு என்ன கொடுக்கிறது? சூரியன் இல்லாவிடில் நமக்கு என்ன ஆகும்?

16. பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரம்

அரும்பதம் :—

அடிவாரம் வளைவு அஸ்திவாரம்

ஐரோப்பாக் கண்டத்தில் இத்தாலி என்ளுெரு தேசம் இருக்கிறது. அத்தேசத்தின் வட பகுதியில் மேற்குக் கடற்கரை ஓரமாக ஒரு பட்டணம் உண்டு. அதன் பெயர் பைசா என்பது.

அவ்வூரிலுள்ள மாதா கோவிலில் மணி கட்டும் கோபுரம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. எல்லோரும் அதைச் "சாய்ந்த கோபுரம்" என்று பெயர் சொல்லி அழைப்பார்கள்.

கி. பி. 1174-ம் ஆண்டில் அதைக் கட்டத் தொடங்கிஞர்கள். கி. பி. 1350-ம் ஆண்டிலே தான் அது கட்டி முடிக்கப்பட்டது. எத்தனை வருஷங்கள் சென்றிருக்கின்றன! பாருங்கள்.

அக் கோபுரத்தின் உயரம் 179 அடி. அடிவாரத்தில் அதனுடைய சுவர்கள் 13 அடி கனமுள்ளவை. அடிவாரத்தில் 15 தூண்கள் அரை வட்ட வடிவமான வளைவுகளைத் தாங்கி நிற்கின்றன. இவ்வாறிருக்கும் அடிப்பாகத்தின் மேலே ஆறு அடுக்குகள் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றிலும் முப்பது தூண்கள் வளைவுகளைத்



தாங்கி நிற்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலே, அடிப்பாகத்திலுள்ள தரை மட்டத்திலிருந்து எட்டாவது அடுக்காக, மணி கட்டும் இடம் காணப்படுகிறது. அது குறுகிய சுற்றளவுள்ளது. அதில் பன்னிரண்டு தூண்களே உள்ளன.

இப் பிரும்மாண்டமான கோபுரம் நேர்

செங்குத்திலிருந்து 16 அடி விலகிச் சாய்ந்திருக்கிறது. அப்படிச் சாய்ந்திருந்தும், கீழே விழாமல் இருக்கிறது. என்ன ஆச்சரியம்! பாருங்கள்.

அது சாய்ந்திருப்பதற்குக் காரணம் யாது? அதனுடைய அஸ்திவாரமே என்று சொல்லப்படுகிறது. அதனுடைய அஸ்திவாரம் கூடுதலான அகலமில்லாமல், கோபுரத்தின் அளவினதாகவே இருக்கிறது. அதன் ஆழமும் பத்து அடிதான்.

இக் கோபுரம் உலகத்திலுள்ள அதிசயங்களில் ஒன்ருகச் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

செய்யுள்:—

மாரி யல்லது காரிய மில்லை

பயிற்சி:—பைசா நகரம் எந்த தேசத்தில் இருக்கிறது?
அங்குள்ள கோபுரம் எவ்வளவு சாய்ந்திருக்கிறது?
அதில் எத்தனை அடுக்குகள் இருக்கின்றன?

17. ஏழைச் சிறுவன்

அரும்பதம் :—

திக்கற்ற	சம்பளம்	அங்குமிங்கும்
மரியாதை	ஆதரவு	வயிறு வளர்த்தல்
வருத்தம்	பெருக்கி	வாடு அழுகின

ஓர் ஊரில் இரண்டு ஏழைச் சிறுவர்கள் இருந்தார்கள். அவர்களுடைய பெயர்கள் முருகன், காளி. முருகன் பெரியவன். அவனுக்கு ஒன்பது வயது இருக்கும். காளி சிறியவன். அவனுக்கு வயது ஏழு.

அவர்கள் இருவரும் திக்கற்ற பிள்ளைகள். அவர்களுக்கு ஆதரவு செய்வார் ஒருவரும் இல்லை. அவர்கள் சாலைகள் கூடும் இடத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்தார்கள். அந்த வேலைக்கு அவர்களுக்குச் சம்பளமாகச் சிறிது பணம் கிடைத்தது. அதைக் கொண்டு வயிறு வளர்த்து வந்தார்கள்.

குளிர் காலத்தில் ஒரு நாள் அவர்களுக்கு உணவு எதுவும் கிடைக்கவில்லை. பசியாலும் குளிராலும் மிக வாடினார்கள். ஏதாவது கிடைக்காதா என்று சாலையில் அங்குமிங்கும் சுற்றித்திரிந்து பார்த்தார்கள்.

கொஞ்சநேரம் கழிந்ததும், முருகன் காளியைப் பார்த்து, "காளி! ஏதேனும் கிடைத்ததா?" என்று கேட்டான். "ஒன்றுமில்லை"

என்று வருத்தத்தோடு பதில் சொல்லிவிட்டு, "உனக்கு ஏதாவது கிடைத்ததா?" எனக் காளி கேட்டான். அதற்கு முருகன், "ஆம், ஒரு பக்கம் கொஞ்சம் அழுகின ஆப்பிள் பழம் கீழே கிடந்தது; அதை எடுத்துக்கொண்டேன்" என்று சொல்லி, "தம்பீ! இதோ நீ கொஞ்சம் சாப்பிடு" என்று அப்பழத்தை நீட்டினான்.

காளி அதை வாங்கி, மரியாதைக்குக் கொஞ் சம் கடித்துவிட்டுத் திருப்பிக் கொடுத்தான். அதைக் கண்ட முருகன் "தம்பீ! பாவம், நீ சிறுவன், பயப்படாதே. இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கடித்துச் சாப்பிடு" என்றான். பிறகு, இருவரும் அதைக் கடித்துத் தின்று தங்களுடைய பசியை ஆற்றிக் கொண்டார்கள்.

சிறுவர்களே! நீங்களும் அந்தச் சிறுவர் களைப்போல் ஒருவர்மேல் ஒருவர் அன்பு வைத்து உபகாரம் செய்து கொள்ளுவது நல்லது.

உன்னைப்போல் உன் அயலானை நேசி.

செய்யுள் :—

தீராக் கோபம் போரா முடியும்

பயிற்சி :—மூத்தவன் பெயர் என்ன?
இளையவன் பெயர் யாது?
அவர்கள் இருவரும் என்ன செய்து பிழைத்தார்கள்?
அவர்கள் ஒருவர்மேல் ஒருவர் எப்படி இருந்தார்கள்?

18. வாழை

அரும்பதம் :—

நீர்வளம் உண்கலம் குலே தள்ளும்
முற்றியதும் அடையாளம் ஊன்றி

வாழை ஒரு வகை மரம். நீர் வளமுள்ள இடங்களில் அது நன்ருய் வளரும் தன்மையுள்ளது. அதற்கு விதை இல்லே. குழி தோண்டி, அதில் வாழைக் கன்றை ஊன்றிப் பயிர் செய்வார்கள்.

வாழை பத்து மாதங்களில் குலே தள்ளும். வாழை மரம் காய்ப்பதற்கு முதல் அடையாளமாயுள்ளது கண்ணுடி இலே. குலேயிலுள்ள காய் முற்ற மூன்று மாதங்கள் செல்லும். ஒரு வாழை ஒரு குலேதான் போடும். குலேயிலுள்ள காய்கள் முற்றியதும் மரத்தை வெட்டி விடுவார்

கள். பிறகு, கீழ்க் கன்றுகள் மரமாக வளர்ந்து பலன் தரும்.

வாழையில் பல வகை உண்டு. அவை களில் முக்கியமானவை, மலை வாழை, ரஸ்தாளி, பூவன், செவ்வாழை, பச்சை வாழை முதலியன.

வாழை மிகவும் உபயோகமுள்ளது. அதன் காய், பூ, தண்டு முதலியவற்றைத் தின்ன லாம். வாழை இலையை உண்கலமாக உபயோ கிக்கலாம். வாழை நாரினால் பூத்தொடுக்கலாம்.

செய்யுள் :—

தொழுதூண் சுவையினுமு தூணினிது

பயிற்சி :—வாழை மரத்துக்கு விதை உண்டா?
அதை எப்படிப் பயிர் செய்யலாம்?
வாழையின் உபயோகம் யாது?
வாழையில் சில வகைகளைக் கூறு.

19. தொழிலாளிகள்

அரும்பதம் :—

தொழிலாளி	அவசியம்	அல்லல்
ஈடுபடுதல்	மக்கள்	தலைகாட்டும்
மிகுதி	சுகவாழ்வு	அவமதிப்பு

தொழில் என்பது வேலை. வேலை செய்கிற வர்கள் தொழிலாளிகள். வேலையிற் பலவகை உண்டு. உலகத்திலுள்ள மனிதர்கள் பல வகையான வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

செங்கல்லும் சுண்ணாம்பும் கொண்டு சுவர் எழுப்பிக் கட்டட வேலை செய்பவர்

கொற்றர். மர வேலை செய்பவர் தச்சர். இரும்பு வேலை செய்பவர் கொல்லர். செம்பி

னாலும் பித்தளையினாலும் பாத்திரங்கள் செய்பவர் கன்னார். தங்கம், வெள்ளி போன்ற

விலையுயர்ந்த உலோகங்களாற் நகை செய்பவர் தட்டார். இன்னும் வேறு தொழில்

களும், அவற்றைச் செய்யும் ஆட்களும் மிகுதியாக உண்டு.

தொழில்கள் எல்லாம் அவசியமானவை. அவை மக்களின் சுகவாழ்விற்காக உள்ளவை. தொழிலாளர் இல்லாது போனால் உலகம் நடைபெறாது. உணவிற்கும் உடைக்கும் மக்கள் அல்லற்படுவர். பஞ்சமும், கொலை, களவு முதலிய பாவங்களும் தலைகாட்டும்.

ஆகவே, தொழிலாளர் நாட்டின் நலனைக் காப்பவர் ஆவர். சிறு தொழிலானாலும் அவமதித்தல் கூடாது. அதன் அவசியம் அது இல்லாதபோதுதான் தெரியும்.

செய்யுள் :—

தோழனோடு மேழைமை பேசேல்

பயிற்சி :— தட்டார் எனப்படுவர் யார்?
க்ஷவரம் செய்பவர் யார்?
தொழிலாளர் இல்லாது போனால் என்ன ஆகும்?

20. யானை

அரும்பதம் :—

சஞ்சரிக்கும்	அவயவம்	பிரதேசம்
தந்தம்	சுலபமாய்	கூட்டங் கூட்டமாய்
உறுப்பு	பளுவான	நாணல்

யானை காட்டு மிருகம். யானை உஷ்ணப் பிரதேசங்களிலுள்ள காடுகளில் கூட்டங் கூட்டமாய்ச் சஞ்சரிக்கும்.

யானை உருவத்தில் மிகப் பெரியது. அதற்குப் பெரிய தலை உண்டு. அதன் கழுத்து குறுகலானது. யானையின் கால்கள் தூண்களைப்போல் பருமனும் உறுதியாயும் இருக்கும். மற்ற மிருகங்களுக்கு இல்லாத உறுப்பு யானைக்கு உண்டு. அதுதான் துதிக்கை.



துதிக்கை முகத்திலிருந்து நீளமாகத் தரை வரைத் தொங்கும். அதன் நுனியில் விரல் போன்ற அவயவம் இருக்கிறது. அதனால் ஊசி போன்ற சிறிய பொருளையும் யானை சுலபமாய் எடுக்கும்.

யானையின் கண்கள் சிறியனவாய் இருக்கின்றன. அதன் காதுகள் முறம்போல் பெரிதாய் இருக்கும்.

ஆண் யானைக்குக் கொம்பு உண்டு. யானையின் கொம்பைத் தந்தம் என்று சொல்லுவார்கள். பெண் யானைக்குத் தந்தம் இல்லை; இருந்தாலும் சிறியதாய் இருக்கும்.

நாணல், கரும்பு, இலை, தழை, அரிசி, பழம் முதலியவற்றை யானை தின்னும். அது மாமிசம் உண்பதில்லை.

யானை மிகவும் உபயோகமுள்ள மிருகம். அரசர்களும், பிரபுக்களும் யானையின் மேலேறிச் செல்வார்கள். மரம்போன்ற பளுவான சாமான்களை இழுத்துச் செல்ல யானை உதவும். அதன் தந்தம் பல பொருள்கள் செய்ய உதவுகின்றது.

செய்யுள் :—

நல்லிணக்க மல்ல தல்லற் படுத்தும்

பயிற்சி :—யானையின் உணவு யாது ?

யானையின் உபயோகத்தைப்பற்றி மூன்று வாக்கியங்கள் எழுது.

21. நல்லொழுக்கம்



அரும்பதம் :—

தியானம்	அன்பு	உண்மை
கந்தை	மரியாதை	கவனம்
கசக்கி	திருத்தமாக	கழுவு

அதிகாலையில் படுக்கையை விட்டு எழுந்திரு. உடனே கடவுளை நினைத்து தியானம் செய். கை, கால், முகம் கழுவு. பல் விளக்கு. அழுக்குப்போக உடம்பைத் தேய்த்துக்குளி. ஆடை அழுக்கில்லாமலும் துப்புரவாயும் இருக்க வேண்டும். கந்தையானலும் கசக்கிக் கட்டு. காலம் தாழ்த்தாமல் பள்ளிக்கூடம்

போ. பாடங்களைக் கவனத்தோடு கற்றுக் கொள். எல்லாரிடமும் அன்பாயும் மரியாதை யாயும் இரு. செய்வனவற்றைத் திருத்தமாகச் செய். எப்பொழுதும் உண்மையே பேசு.

செய்யுள் :—

நுண்ணிய கருமமும் எண்ணித் துணி

பயிற்சி :—எப்பொழுது படுக்கையை விட்டு எழுந் திருப்பாய்? எப்படிக் குளிப்பாய்? எவ் வகையான உடைகளை அணிவாய்? பள் ளிக்கூடத்தில் எப்படி இருப்பாய்?

22. தருமபுத்திரன்

அரும்பதம் :—

சாஸ்திரம்	உபாயம்	யுத்தம்
வழங்குதல்	இசைந்தான்	அகோரம்
முதன்மை	வனவாசம்	மடிதல்
பொறுமை	சம்மதித்தல்	சூது

பல வருஷங்களுக்கு முன்பு வட இந்தியா வில் திருதராஷ்டிரன் என்று ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு ஒரு சகோதரன் உண்டு. அவன் பெயர் பாண்டு. திருதராஷ்டிரனுக்கு நூறு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவன் துரியோதனன். பாண்டுவுக்கு ஐந்து பிள்ளைகள். அவர்களில் மூத்தவன் தரும புத்திரன்.

துரியோதனனுக்கும் அவனுடைய தம்பி களுக்கும் கௌரவர் என்ற வேறு பெயர் உண்டு. அதே போல், தருமபுத்திரனுக்கும் அவனுடைய தம்பிகளுக்கும் பாண்டவர்கள் என்ற பெயர் வழங்கி வந்தது.

கௌரவர்களும் பாண்டவர்களும் துரோணாரிடம் கல்வி கற்று வந்தார்கள். வில்வித்தையிலும், மற்ற சாஸ்திரங்களிலும் பாண்டவர்கள் முதன்மையாக விளங்கினுர்கள். அதைக்கண்டு துரியோதனன் பொருமை கொண்டான்.

பாண்டவர்களைக் கொன்றுவிட வேண்டுமென்று நினைத்தான். அதற்குப் பல உபாயங்கள் செய்தான். அவனது உபாயங்கள் எல்லாம் உபயோகமில்லாமல் போயின.

கடைசியில், துரியோதனன் தருமபுத்திரரைச் சூதாட அழைத்தான். தருமபுத்திரர் இசைந்தார். துரியோதனனின் மாமனான சகுனியோடு சூதாடினார். நாடு நகரங்கள் எல்லாவற்றையும் இழந்தார். துரியோதனன் பாண்டவர் நிலையைக்கண்டு சந்தோஷமடைந்தான். பதின்மூன்று வருஷம் வனவாசம் செய்துவிட்டு வந்தால், நாட்டைத் திரும்பவும் தருவதாகச் சொன்னான்.

பாண்டவர்களும் அதன்படியே காட்டிற்குச் சென்றார்கள், வனவாசம் முடிந்ததும், திரும்பி வந்து நாட்டைத் தரும்படி கேட்டார்கள். துரியோதனன் சம்மதிக்கவில்லை. ஆகையால், யுத்தம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

குருக்ஷேத்திரம் என்ற இடத்தில் பதினெட்டு நாட்கள் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் அகோர யுத்தம் நடந்தது. கொடியவர்களாகிய கௌரவர் தோற்று மடிந்தார்கள். பாண்டவர்கள் வெற்றி அடைந்து நாட்டை ஆண்டார்கள்.

பொறுத்தவர் பூமி ஆள்வார்.

147176.

செய்யுள் :—

நூன் முறைத் தெரிந்து சீலத்தொழுகு

பயிற்சி :— கௌரவர் யார்?

பாண்டவர் யார்?

குருக்ஷேத்திரத்தில் ஏன் யுத்தம் நடந்தது?

TB
031(3)
N 56

23. வயற் புறம்



அரும்பதம்:—

ஆகாயம்	செப்பனிட்டு	பசுமையான
அறுவடை	சாகுபடி	முக்கியம்

முருகன் தன் மாமன் ஊருக்குப் போனுன். மாமன் முருகனே அழைத்துக்கொண்டு வயற் புறங்களுக்குச் சென்ருர்.

அப்போது மாலேவேளே. சூரியன் ஆகாயத்தில் மேற்குப் பக்கத்தில் இருந்தான். மெல்லிய காற்று வீசிக்கொண்டிருந்தது. நாலா பக்கங்களிலும் நெல் வயல்கள் இருந்தன. பசுமையான நெற்பயிர் பார்வைக்கு அழகாகவும், குளிர்ச்சியாகவும் இருந்தது.

நமக்கு முக்கிய உணவு அரிசியல்லவா? அரிசி நெல்லினுள் இருக்கிறது. அரிசியை மூடிக்கொண்டிருப்பது உமி.

நெல் சாகுபடி செய்ய நஞ்சை நிலமே ஏற்றது. நெற்பயிருக்கு உஷ்ணமும் தண்ணீரும் மிகுதியாக வேண்டும். முதலில் நிலத்தை உழுது செப்பனிட்டுத் தண்ணீர் பாய்ச்சி நாற்று நடுவார்கள். நான்கு, அல்லது ஐந்து மாதங்களில் கதிர் முற்றி நெல் அறுவடை செய்யத் தகுதியாகிவிடும்.

நெல்லில் பலவகை உண்டு. சம்பா, சிறு மணி, சீரகச் சம்பா, மிளகு சம்பா, ஆனைக் கொம்பன் முதலியவை முக்கியமானவை.

இந்தியா, பர்மா, தாய்லாந்து, மலாயா முதலிய நாடுகளில் நெல் பயிராகின்றது.

செய்யுள் :—

நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகமில்லை

பயிற்சி:—நெற் பயிருக்கு அவசியமானவை எவை?

நெல்லில் சில வகைகளைக் கூறு.

நெல் சாகுபடிக்கு எந்த நிலம் ஏற்றது?

24. தெனலி இராமன்

அரும்பதம்:—

வேடிக்கை	அங்குமிங்கும்	தணி
விசித்திரமான	உத்தரவு	தலைமறைவாக
அடங்கி	கீழ்ப்படி	மறுபடியும்
நடமாடு	கோபம்	புத்திக்கூர்மை

தெலுங்கு தேசத்தில் தெனலி என்று ஓர் ஊர் உண்டு. அந்த ஊரில் இராமன் என்று ஒருவன் இருந்தான். அவன் புத்திக் கூர்மை உள்ளவன். வேடிக்கையாகப் பேசுவான். விசித்திரமான காரியங்களைச் செய்வான். எல்லோரையும் சிரிக்கச் செய்வான்.

தெனலிக்கு அரசராயிருந்த இராயரிடம் அவன் வேலை பார்த்து வந்தான். ஒரு நாள் இராயருக்குக் கோபம் வரும்படி நடந்துகொண்டான். உடனே இராயர், "என் கண்ணிற் படாமல் போ" என்றார். இராமனும் அவர் சொல்லுக்கு அடங்கி வெளியே சென்றான்.

சிறிது நேரம் சென்ற பிறகு, ஒரு சட்டியைத் தலையில் கவிழ்த்துக்கொண்டு உள்ளே வந்து அங்குமிங்கும் நடமாடினான். அப்போது இராயருடன் சிலர் இருந்தார்கள். இராயர் தெனலி இராமன் நடமாடுவதைப் பார்த்தார். அவன் அப்படிச் செய்தது வேடிக்கையாக இருந்ததால், கொல்லென்று சிரித்தார்.

இராமனை அழைத்து "என்னடா! இராமா! இப்படிச் செய்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு இராமன், "தங்கள் உத்திரவுக்குக் கீழ்ப் படிந்து தலைமறைவாக இருக்கிறேன்" என்றான். அதைக் கேட்டதும் இராயர் மறுபடியும் சிரித்துக் கோபம் தணிந்தார்.

செய்யுள் :—

புலையுங் கொலையுங் களவுந் தவிர்

பயிற்சி:—தெனாலி எங்கே இருக்கிறது? இராயர் கோபித்ததற்கு தெனாலி இராமன் என்ன செய்தான்? சட்டியின் படம் ஒன்று எழுது.

25. கடற்கரை

அரும்பதம்:—

கடற்கரை	கடற்காற்று	அலை
ஆரோக்கியம்	ஆழம்	கரையேறி
உட்கொண்டான்	சுமார்	தலை வாரி

மாதவன் சிரம்பானிலிருக்கும் தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் மூன்றாம் வகுப்பில் வாசிக்கிறான். ஒரு வெள்ளிக்கிழமையன்று பள்ளிக்கூடம் முடிவடைந்ததும், மாதவன் தகப்பனாரிடம் போய், "அப்பா! நாளைக்குப் பள்ளிக்கூடம் போகவேண்டாம். சனிக்கிழமை. போர்

டிக்சன் போய்வரலாமா?" என்று கேட்டான். அதற்கு அவர், "அப்படியா! சரி. போவோம்." என்று சொன்னார்.

போர்டிக்சன், கடற்கரையில் இருக்கும் ஓர் ஊர். அது சிரம்பானிலிருந்து இருபத்தைந்து மைல் தூரத்தில் இருக்கிறது. அவ்வூருக்குப் போய்வர எப்பொழுது வேண்டுமானாலும் மோட்டார் வண்டிகள் வாடகைக்குக் கிடைக்கும்.

மறுநாள் மாதவன் அதிகாலையில் தகப்பனாரோடு போர்டிக்சனுக்குப் புறப்பட்டான். ஏழு மணி ஆவதற்குள் போர்டிக்சன் கடற்கரையை அடைந்தார்கள். அவர்களைப்போல் இன்னும் பலர் அங்கே வந்திருந்தார்கள்.

போர்டிக்சன் கடற்கரை மிகவும் அழகானது. ஒன்பது மைல் நீளத்திற்கு தென்னந்

தோப்பும், மணல் நிறைந்த கடற்கரையோரமும் காணப்படும். பசும் புல்லும் நிழலும் நிரம்பியிருக்கும். கடலும் அதிக ஆழமில்லை. அலையும் அவ்வளவு அதிகம் இல்லை. சிறுவரும் பயமின்றி இறங்கி, கடலில் நீந்தி விளையாடலாம்.

மாதவன் அங்கே வந்திருந்த பிள்ளைகளோடு கூடி நீரில் மூழ்கி விளையாடினான்; நீந்தினான். போதும் என்று தோன்றும் வரையும் குளித்தான். பிறகு கரையேறி, உலர்ந்த ஆடைகளை உடுத்திக்கொண்டான். தலை வாரி, நெற்றியில் திருநீறு அணிந்துகொண்டான். கடவுளை நினைத்து வணங்கினான். தகப்பனாரோடு தென்னை மரத்து நிழலில் உட்கார்ந்து காலை உணவு உட்கொண்டான். பத்து மணி சுமாருக்கு மோட்டார் ஏறி சிரம்பானுக்கு வந்து சேர்ந்தான்.

கடல் நீர் உப்பு நீர். அதில் குளிப்பது உடம்புக்கு நல்லது. கடற்காற்றும் தேகத்திற்கு ஆரோக்கியம் அளிக்கும்.

செய்யுள் :—

ஓதாம லொருநாளு மிருக்க வேண்டாம்

பயிற்சி :—போர்டிக்சன் சிரம்பானிலிருந்து எவ்வளவு தூரம்? கடல் நீர் எப்படி இருக்கும்? போர்டிக்சன் கடற்கரையைப் பற்றி விவரித்துக்கூறு.

26. சிறகு ஒடிந்த சிறு பட்சி

அரும்பதம்:—

மாரி புயல் ஓயும் கெஞ்சி கடுகடுத்து
புதர் இரக்கம் ஆபத்து சேதம் திடீரென்று

ஒரு காட்டில் பல பட்சிகள் வசித்து வந்தன. திடீரென்று அவை எல்லாம் தூர தேசத்தை நாடிப் பறந்து சென்றன. அப்பட்சிக் கூட்டத்தில் சிறகு ஒடிந்த சிறு பட்சி ஒன்று இருந்தது. அதனால் பறந்து செல்ல இயலாமற் போயிற்று.

மாரிக் காலமும் விரைவில் வந்து சேர்ந்தது. புயலும் மழையும் ஒன்றின் பின் ஒன்றாய் வரத்தொடங்கின. பாவம்! சிறகு ஒடிந்த சிறு பட்சி என்ன செய்யும்? தங்கி இருக்க இடம் இல்லாமல் துன்பம் அடைந்தது.

அருகில் இருந்த பெரிய ஆலமரத்திற்குச் சென்றது. அதனிடம், "ஐயா, மழை ஓயும் வரையும் எனக்கு இருக்க இடம் தாரும்" என்று கெஞ்சிக் கேட்டது.

ஆலமரம், "நீ யாரோ எனக்குத் தெரியாது. போ—போ—என்னிடம் இடம் இல்லை" என்று கடுகடுத்துச் சொல்லிற்று.

பட்சி மெல்ல மெல்லப் போய் அத்திமரத்தினிடம் இடம் கேட்டது. அதுவும் இடம் தர மறுத்தது.

பட்சி ஏக்கம் அடைந்து ஒன்றும் தோன்றுமல் இருந்தது.

அப்போது அங்கே இருந்த ஒரு புதர் இரக்கம் காட்டிற்று. அப் பட்சியை அழைத்தது. "நான் அடர்த்தியாய் இருக்கிறேன். நீ என்னிடம் வந்து தங்கு. என்னுடைய பழங்களைச் சாப்பிடு. சந்தோஷமாய் இரு" என்று அன்புடன் சொல்லிற்று.

உடனே அப் பட்சி கவலையை ஒழித்து புதருக்குள் சென்று தங்கிற்று.

அன்று இரவில் பெரிய புயல் அடித்தது. வீடுகள் சேதம் அடைந்தன. ஆலும் அத்தியும் ஒடிந்து விழுந்தன. புதருக்கும், சிறகு ஒடிந்த சிறு பட்சிக்கும் ஆபத்து ஒன்றும் ஏற்பட இல்லை.

செய்யுள்:—

நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்

பயிற்சி:—எல்லாப் பட்சிகளும் பறந்துபோகும்போது ஒரு பட்சி மட்டும் பிரியக் காரணம் யாது? ஆலமரம் என்ன சொல்லிற்று? இப் பாடத்தினுல் நீ அறியும் நீதி யாது?

27. கடிகாரம்

அரும்பதம்:—

கருவி	கால அளவு	பாகம்
தாமதம்	துரிதம்	நகர்ந்து
செகண்டு	ஞாபகம்	சின்னஞ் சிறு

கடிகாரம் என்பது மணி காட்டும் கருவி. மணி என்பது கால அளவு. நீ எத்தனை மணிக்குப் படுக்கையை விட்டு எழுந்திருக்கிறாய்? எத்தனை மணிக்குப் பள்ளிக்கூடம் வருகிறாய்? எத்தனை மணிக்கு வீட்டுக்குத் திரும்பிப் போகிறாய்?

நாம் செய்யும் வேலைகளை ஏறக்குறைய மணிக்கணக்கின்படியே செய்கிறோம். அப்படிச் செய்வதனால் பல நன்மைகளைப் பெறுகிறோம். ஆகையால், மணி காட்டும் கருவியாகிய கடிகாரத்தை ஒவ்வொருவரும் வைத்திருப்பது நல்லது.

கடிகாரத்தைப் பார்த்து மணி இவ்வளவு என்று சொல்ல உங்களால் முடியுமா? கடிகாரத்தின் முன்புறத்தைப் பாருங்கள். அதில் ஒரு கண்ணாடியின் கீழே இருக்கும் அட்டையில் ஒன்று முதல் பன்னிரண்டு வரை எண்கள் எழுதியிருப்பதைக் கவனியுங்கள். அவை மணிகளைக் குறிக்கின்றன. இன்னும், இரண்டு முட்கள் இருப்பதைப் பாருங்கள். ஒன்று குட்டையாயும் மற்றொன்று நீளமாயும் இருக்

கின்றதல்லவா? குட்டையாயிருப்பதைச் சின்ன



முள் என்று சொல்லுவார்கள். நீளமாயிருப்பதைப் பெரிய முள் என்று சொல்லுவார்கள்.

சிறிய முள் மணியைக் காட்டும். பெரிய முள் நிமிஷங்களைக் காட்டும். நிமிஷங்கள் மணியின் சிறிய பாகங்கள். இந்த இரண்டு முட்களும் வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கமாகச் சுற்றி வருகின்றன. சிறிய முள் ஒரு மணியிலிருந்து இன்னெரு மணிக்கு நகர்ந்து செல்லும் கால அளவில், பெரிய முள் ஒரு முறை கடிகார வட்டம் முழுவதையும் சுற்றி, பன்னிரண்டாவது மணியில் வந்து நிற்கும். இதனுலே, சிறிய முள் தாமதமாயும், பெரிய முள் துரிதமாயும் நகர்ந்து செல்லுகின்றன என்பதை அறியலாம்.

சில கடிகாரங்களில் ஒரு சிறிய வட்டத்தினுள் சின்னஞ் சிறு முள் ஒன்று வேகமாகவும் நிற்காமலும் சுற்றி வருவதைப் பார்த்திருப்பீர்கள். அது என்ன தெரியுமா? அது தான் செகண்டு முள் என்பது. செகண்டு என்ருல்

என்ன? அது மிகச் சிறிய கால அளவு. கடிகாரம் "டிக், டிக்" என்று சப்தமிடுகின்றதல்லவா? இந்த மிகச் சிறிய முள், ஒவ்வொரு சத்தத்திற்கும் கொஞ்சம் நகர்ந்து செல்லுவதைக் கவனியுங்கள். பெரிய முள் ஒரு நிமிஷத்திலிருந்து இன்னொரு நிமிஷத்திற்குச் செல்லும் கால



அளவில், இந்த மிகச் சிறிய முள் அதனுடைய வட்டம் முழுவதையும் ஒரு முறை சுற்றி முடித்து விடும். ஒரு மணி நேரத்தில் இது தன்னுடைய வட்டத்தை அறுபது தடவை சுற்றி முடித்து விடும்.

அறுபது செகண்டுகள் கொண்டது ஒரு நிமிஷம். அறுபது நிமிஷங்கள் கொண்டது ஒரு மணி. இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

சிறிய முள், அதாவது மணி காட்டும் முள் ஏழு என்னும் எண்ணிலும், பெரிய முள் அதாவது நிமிஷங் காட்டும் முள் பன்னிரண்டு என்னும் எண்ணிலும், நிற்கும் போது எத்தனை மணி தெரியுமா? ஏழு மணி. சரியாக, ஒன்று முதல் பன்னிரண்டு மணிகள் ஆகும் போதெல்லாம், மணிகாட்டும் முள் அந்த அந்த மணிக்குரிய எண்ணிலும்,

நிமிஷங் காட்டும் முள் பன்னிரண்டு என்ற எண்ணிலும் நிற்கும்.

நிமிஷம் காட்டும் முள் பன்னிரண்டில் நிற்காமல் வேறு ஏதாவது ஒரு எண்ணில் நிற்கும் சமயத்தில், மணிகாட்டும் முள் எங்கே இருக்கும் தெரியுமா? ஆம், தெரியும். அது ஏதாவது இரண்டு எண்களுக்கு இடையில் இருக்கும்.

எட்டேகால் மணிக்கு கடிகார முட்கள் எங்கே இருக்கும்? நிமிஷ முள் மூன்றில் நிற்கும்; மணி முள் எட்டு என்னும் எண்ணைக் கடந்து, ஒன்பதிற்குச் செல்லும் வழியில் நிற்கும். அப்போது அதற்கு எட்டு சமீபத்திலும், ஒன்பது தூரத்திலும் இருக்கும்.

எட்டரை மணிக்கு நிமிஷ முள் ஆறிலும், மணி முள் எட்டுக்கும் ஒன்பதுக்கும் நடு மத்தியிலும் இருக்கும்.

எட்டேமுக்கால் மணிக்கு நிமிஷ முள் ஒன்பதில் இருக்கும்; மணி முள் எட்டை விட்டுத் தூரத்தில் விலகி ஒன்பதின் பக்கமாக நிற்கும்.

நிமிஷ முள் ஒரு எண்ணிலிருந்து இன்னொரு எண்ணிற்கு நகர்ந்து விடுமானல், ஐந்து நிமிஷங்கள் ஆகிவிட்டன என்று அர்த்தம்.

கடிகாரத்தைப் பல முறை பாருங்கள். சரியானபடி மணி பார்க்கப் பழகிக் கொள்ளுங்கள்.

செய்யுள்:—

தருமத்தை ஒருநாளு மறக்க வேண்டாம்

பயிற்சி:—கடிகாரத்தில் எத்தனை முட்கள் உண்டு? அவைகள் செய்யும் வேலை யாது? ஒரு மணிக்கு எத்தனை நிமிஷம்? பன்னிரண்டு மணிக்கு கடிகார முட்கள் எங்கே இருக்கும்? கடிகாரத்தின் படம் எழுது?

28. ஒரு புத்திசாலி

அரும்பதம்:—

தவறுதல்	கேலி	சந்தை
நிச்சயமாக	சரிவு	அருகாமை
சந்தடி	பசிக்களை	வெறுங்கை

பல வருஷங்களுக்கு முன்னால் அலோர் ஸ்டாரில் ஒரு மனிதன் வசித்து வந்தான். அவன் எதைச் செய்தாலும் தவறுதலாகவே செய்வான். அவன் ஒரு சிறு வேலையைக்கூடச் சரியாகச் செய்தது இல்லை. அதனாலே எல்லோரும் அவனைக் கேலியாகப் புத்திசாலி என்று அழைத்தார்கள்.

அப் புத்திசாலி, ஒரு நாள் எலுமிச்சம் பழங்களை விற்பதற்காக சந்தைக்குப் போனான். அவனுடைய வீட்டிற்கும் சந்தைக்கும் மூன்று

மைல் தூரம் இருக்கும். சந்தைக்குப் போகும் வழி, மரங்கள் அடர்ந்த மலையின் ஊடே சென்றது. மலைமீதுள்ள அப்பாதையில் அவன் நடந்துபோகும்போது, ஒரு எலுமிச்சம்பழம் கூடையிலிருந்து நழுவி கீழே விழுந்து பள்ளத்தில் உருண்டு ஓடிற்று. அதை அவன் பார்த்தான்.

உடனே அவன் அதை எடுத்து மறுபடியும் கூடைக்குள் வைத்துக் கொள்ளாமல், அதன் பக்கமாகத் திரும்பி நின்றுகொண்டு, "ஆம். உனக்கு சந்தை இருக்கும் இடம் தெரியும். நிச்சயமாக நீ அங்கே வந்துவிடுவாய். எனக்குத் தெரியும். சரி, போ." என்று சொன்னான்.

பிறகு கொஞ்சநேரம் அங்கேயே நின்று யோசித்தான். கையிலிருந்த கூடையைக் கீழே வைத்தான். "இவைகளுக்கும் வழி தெரியும். தப்பாமல் சந்தைக்கு வந்து சேர்ந்துவிடும்" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். மறு யோசனை இல்லாமல், அவைகள் எல்லாவற்றையும் மலைச்சரிவிலே உருட்டிவிட்டான். அவைகள் கீழே உருண்டு ஓடுகையில் "என்னை நீங்கள் சந்தையில் அல்லது சந்தைக்கு அருகாமையில் சந்தியுங்கள்" என்று கூறினான். இப்படிச் சொல்லி முடித்ததும், கையை வீசிக்கொண்டு நேராகச் சந்தையை நோக்கி நடந்தான்.

ஒரு மணி நேரம் கழிந்ததும், புத்திசாலி சந்தைக்கு வந்து சேர்ந்தான். சந்தையில் சந்தடி அதிகமாக இருந்தது. பல ஆண்களும், பெண்களும் பண்டங்களைப் பார்ப்பதும், விலை பேசி வாங்குவதும், அங்குமிங்கும் நடப்பதும் ஆக இருந்தனர். அவர்களுள் ஒரு மனிதனைப் பார்த்து, "ஐயா! எலுமிச்சம் பழங்கள் இங்கே வருவதைப் பார்த்தீர்களா?" என்று புத்திசாலி கேட்டான். அதற்கு அம்மனிதன் "அவைகளைக் கொண்டுவந்தது யார்?" என்று கேட்டான். உடனே புத்திசாலி, "ஏன்? யார் கொண்டுவரவேண்டும்? அவைகள் தாமாகவே வந்தன" என்ருன். அதன்மேல், அம்மனிதன் ஒன்றும் சொல்லாமல் சிரித்துவிட்டு அப்பாற் சென்ருன்.

புத்திசாலி சந்தை கலையுமட்டும் அங்கே காத்திருந்தான். எலுமிச்சம் பழங்கள் வர இல்லை.

பின்னர், "நல்லது. அவை ஜிட்ராவுக்குப் போயிருக்கலாம். அங்கே போய்ப் பார்க்கிறேன்" என்று அவன் தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். தாமதியாமல், வாடகைக்கு ஒரு சைக்கிள்வண்டி வாங்கிக்கொண்டு, அதன்மேல் ஏறி வேகமாக ஜிட்ராவை நோக்கிச் சென்ருன். அங்கேயும் எலுமிச்சம் பழங்களைக் காணும். என்ன செய்யலாம்? அவனுக்கு ஒன்றும்

தோன்றவில்லை. பகற்பொழுது கழிந்துவிட்டது. இருட்டும் தருவாய் ஆயிற்று. மன வருத்தத்தோடும், பசிக்களேயோடும் புத்திசாலி வெறுங்கையனுய் வீட்டுக்குத் திரும்பினுன்.

செய்யுள் :—

குற்றமொன்றும் பாராட்டித் திரியவேண்டாம்

பயிற்சி :—புத்திசாலிக்கு ஏன் அப்பெயர் வந்தது? எலுமிச்சம்பழம் எதற்கு உதவும்? சந்தை என்ருல் என்ன? உனக்குத் தெரிந்த ஒரு சந்தையைப்பற்றி ஏழு வாக்கியங்கள் எழுது.

29. விளையும் பயிர் முளையிலே தெரியும்

அரும்பதம் :—

முளை	தேகதிடம்	நாலாபக்கம்
தமயன்	உழை	புகழ்

பல வருஷங்களுங்கு முன்னர் இங்கிலாந்து தேசத்தில் ஹொரேஷியோ நெல்சன் என்னும் சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் மெலிந்து தேகதிடம் இல்லாமல் இருந்தான். அவன் அடிக்கடி தன்னுடைய பாட்டியார் வீட்டுக்குப் போக ஆசைப் படுவான். ஏனென்ருல், பாட்டியார் அவனுடைய மனம் போன

படி வெளியே சென்று வர இடங் கொடுப்பார்.

ஒரு நாட் காலையில் வெளியே சென்ற நெல்சன் உச்சி வேளை மட்டும் வீட்டுக்குத் திரும்பி வர இல்லை. பாட்டியார் கவலை அடைந் தார். ஒரு வேலைக்காரனை அனுப்பி, எல்லா இடங்களிலும் தேடிப் பார்க்கும்படி செய்தார். வேலைக்காரன் நாலா பக்கங்களிலும் சென்று தேடினன். கடைசியாக, ஊருக்கு வெளியே இருந்த காட்டில் ஓடிக் கொண்டிருந்த நதியின் கரையில் நெல்சன் உடகார் ந்திருப்பதைக் கண் டான். உடனே அவனை வீட்டிற்கு அழைத்து வந்தான்.

பாட்டி நெல்சனைப் பார்த்து, "குழந்தாய்! ஏன் இவ்வளவு நேரம் வரையும் காட்டில் தனியே இருந்தாய்? உனக்கு பயம் உண்டாக இல்லையா?" என்று கேட்டார். அதற்கு நெல்சன், "பயமா? அது எப்படி இருக்கும்? அதை நான் பார்க்க இல்லையே!" என்ருன். பாட்டியார் சிறு வனுடைய தைரியத்தைக் கண்டு ஆச்சரியப் பட்டார்.

நெல்சன் கொஞ்சம் பெரிய பையன் ஆன தும் தன்னுடைய தமயனேடு பள்ளிக்கூடம் சென்ருன். அவர்கள் இருவரும் குதிரைமேல் ஏறிக்கொண்டு பள்ளிக்கூடம் போவது வழக்கம். ஒரு நாள் பனி அதிகமாக இருந்தது. அண்ண னும் தம்பியும் குதிரைகளைத் திருப்பி, வீட்டுக்கு

வந்து சேர்ந்தனர். அங்கே தகப்பனாரிடம், "அப்பா! பள்ளிக்கூடம் போக முடியவில்லை. பனி அதிகமாய் இருக்கிறது. நாங்கள் திரும்பி

விட்டோம்" என்றார்கள். அதைக் கேட்டதும், தகப்பனார், "அது சரி இல்லை. இன்னொரு முறை முயற்சி செய்யுங்கள்" என்றார்.

பிள்ளைகள் இருவரும் மறுபடியும் குதிரைகளின் மேலேறி சவாரி செய்யத் தொடங்கினார்கள். சிறிது தூரம் சென்றதும், பனி அதிகமாயும், பாதை கஷ்டமாயும் இருப்பதைக்

கண்டார்கள். தமயன் நெல்சனை நோக்கி, "தம்பீ! இனி முடியாது. வீட்டுக்குத் திரும்பலாம். வா," என்றான். "இல்லை அண்ணா! எவ்வளவு கஷ்டமானாலும் இன்றைக்குப் பள்ளிக்கூடம் போய்த் தீர வேண்டும். அப்படிச் செய்தால் மட்டும் அப்பா சந்தோஷமடைவார்" என்றான்.

தமயனும் சம்மதித்தான். மெல்ல மெல்லச் சென்று பள்ளிக்கூடம் அடைந்தார்கள்.

நெல்சன் பெரியவனானதும் கப்பற்படைத் தலைவனானான். உண்மையோடு உழைத்தான். விரோதிகளை அடக்கினான். பெரும் புகழ் பெற்றான்.

செய்யுள் :—

கற்றவரை யொரு நாளும் பழிக்கவேண்டாம்

பயிற்சி:—நெல்சன் பாட்டியார் வீட்டுக்குப் போக ஏன் ஆசைப்பட்டான்? நெல்சனுடைய தமயன் எப்பேர்பட்டவன்? பெரியவனானதும் நெல்சன் என்ன உத்தியோகம் செய்தான்?

30. கோலாலம்பூர்

அரும்பதம்:—

நடுநாயகம் மைதானம் காரியாலயம்
வியாபித்திருக்கிறது உன்னதமான
நாளுக்குநாள்

மலாயாவிலுள்ள நகரங்களுக்கு எல்லாம் நடுநாயகமாய் விளங்குவது கோலாலம்பூர். நகரத்தின் நடுமத்தியில் பசும்புல் நிறைந்த பெரிய மைதானம் இருக்கிறது. அதன் எதிரே கடிகாரம் பதித்த கோபுரத்தோடு கூடிய சர்க்கார் காரியாலயக் கட்டடம் கம்பீரமாக நிற்கின்றது. அதிலிருந்து, நான்கு திசைகளிலும் நான்கு மைல் தூரத்திற்கு இந்நகரம் வியாபித்திருக்கின்றது. இங்கே அழகான பெரிய கட்டடங்கள் பல இருக்கின்றன. இந்நகரத்தில் இந்தியர், மலாயர், சீனர், ஐரோப்பியர், இன்னும் இதர இனத்தைச் சேர்ந்தவர் ஆகிய அனைவரும் வசிக்கிறார்கள். இந்தியர்களுள், 20,763 ஆண்களும் 12,788 பெண்களும் வசிக்கிறார்கள். இந்நகரத்தின் மொத்த ஜனத்தொகை 176,195. சீனரே மிகுதியாக வசிக்கின்றனர். அவர்கள் நூறாயிரம் பேர்களுக்கு அதிகமாகவே உள்ளனர்.

இந்நகரம் இரண்டு நதிகள் கூடும் இடத்தில் கட்டப்பட்டிருக்கின்றது. இதன் அழகைப்

படத்தில் பாருங்கள். நதியின் மேல் உள்ள பாலத்தையும், அதன் கரையில் உள்ள உன்னதமான கட்டடங்களையும் பாருங்கள்.



இது இங்குள்ள பெரிய வீதியின் படம். இதில் ஒரு பெரிய ஐரோப்பிய வர்த்தகசாலை

இருப்பதைக் கவனியுங்கள். இங்கும் ஒரு பாலம் இருப்பதைக் கவனியுங்கள். படத்தின் இடப் பக்கத்தில் மசூதியிலுள்ள கோபுரம் கொஞ்சம் தெரிகிறது.

இது சர்க்கார் காரியாலயம். இதில் நூற்றுக் கணக்கான உத்தியோகஸ்தர்கள் அரசாங்க



அலுவல்களைக் கவனத்தோடு செய்து வருகிறார் கள்.

அடுத்த பக்கத்தில் மேலே உள்ள படம் இருப்புப் பாதை நிலயத்தைச் சேர்ந்த கட்ட டம். இது எவ்வளவு பெரிதாயும் அழகாயும் இருக்கிறது, பாருங்கள். இங்கும் நூற்றுக்கணக் கான உத்தியோகஸ்தர்கள் வேலை செய்கிறார் கள்.



கீழே உள்ள படம் பொருட்காட்சி மண்டபம். இக்கட்டடம் இப்போது இல்லை. யுத்தத்தில் சேதமடைந்து போய்விட்டது.



இந்நகரத்தில் பல கடைகளும், தேவாலயங்களும், பள்ளிக்கூடங்களும், சிங்காரத் தோட்டமும், படக்காட்சிச் சாலைகளும், நீதி மன்றங்களும் இருக்கின்றன.

இந்நகரம் நாளுக்கு நாள் பெரிதாகிக் கொண்டு வருகிறது. இப்பொழுது இது மலாயாவின் ஐக்கிய சர்க்காரின் தலை நகரமாய் இருக்



கின்றது. பிரதம அதிகாரியாகிய ஹைகமிஷனர் இங்கே வசிக்கிறார். செலங்கூரின் சமஸ்தானாதிபதியாகிய சுல்த்தானும் இங்கே வசிக்கிறார். சுல்த்தானுடைய புராதனமான தலை நகரம் கிள்ளான். கிள்ளான் கோலாலம்பூரிலிருந்து இருபத்து நான்கு மைல் தூரத்தில் இருக்கிறது. கிள்ளானிலிருக்கும் சுல்த்தானின் அரண்மனையை மேலே உள்ள படத்தில் பாருங்கள்.

செய்யுள் :—

மூத்தோர் சொல் வார்த்தைகளை மறக்கவேண்டாம்

பயிற்சி :—கோலாலம்பூரில் உள்ள பெரிய கட்டடங்கள் இரண்டு அல்லது மூன்று கூறு. கிள்ளான் என்பது என்ன? அது எங்கே இருக்கிறது? நீ மலாயாவில் எந்த ஊரில் வசிக்கிறாய்? கோலாலம்பூரைப் பற்றி பத்து வாக்கியங்கள் எழுது.

31. தேனீக்கள்

அரும்பதம் :—

திரவப்பொருள்	அருந்த	தித்திக்கும்
தாடை	ஆயுதம்	சேகரம்

தேன் என்றால் இன்னதென்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் அதைப் பார்த்திருக்கிறீர்களா? அதை என்ன செய்யலாம் தெரியுமா?

தேன் ஒரு திரவப்பொருள். அது தித்திக்கும். அதை அருந்த அனைவரும் ஆசைப்படுவார்கள். தேனீ அதைச் சேர்க்கும். மரக்கிளைகளிலாவது, வீட்டுக் கூரைகளின் உட்புறமாவது தேனீ கூடு கட்டும். அப்படிக் கட்டிய கூட்டில் அது தேனைக் கொண்டு வந்து சேர்க்கும்.

தேன் கூட்டைப் பார். அதிலிருக்கும் ஈக்கள் எல்லாம் ஒரே மாதிரி இருக்கின்றனவா? இல்லை. தேனீக்களில் மூன்று வகையுண்டு. அவைகளுக்கு இராணி, ஆண் ஈ, வேலைக்கார ஈ என மூன்று பெயர்கள் இடப்பட்டிருக்கின்றன.

இதுதான் இராணி. இது பெண் ஈ. இதுவே உருவத்தில் பெரியது. ஒவ்வொரு கூட்டிலும் ஓர் இராணி ஈ மட்டிலும் இருக்கும். இதன் வேலை முட்டையிடுவது. வேறு எந்த வேலையையும் இது செய்யாது.

இது ஆண் ஈ. ஒவ்வொரு கூட்டிலும் சில ஆண் ஈக்கள் இருக்கும். ஆண் ஈயும் வேலை செய்யாது. இது நம்மைக் கொட்டுவதும் இல்லை. இது பறக்கும் போது சத்தமிட்டுக் கொண்டே பறக்கும்.

இதுதான் வேலைக்கார ஈ. இது உருவில் எல்லாவற்றிலும் சிறியது. இது கூடுகட்டும். தேன் சேர்க்கும். புஷ்பங்கள் இருக்கும் இடங்களுக்குப் பறந்து சென்று, தன்னுடைய நீண்ட நாக்கை புஷ்பங்களின் அடிவரையிலும் செலுத்தி அங்கே தங்கியிருக்கும்

தேனை உறிஞ்சும். பிறகு அதை தேன் கூட்டில் கொண்டு வந்து சேர்க்கும். தேனீக்களுக்கு உணவு தேனே யாகும். சேகரம் செய்யும் தேனில் சிறிதளவே அவைகட்கு ஆகாரமாகும். அவைகள் தேனைச் செலவு செய்ய விரும்பு வதில்லை. அதைச் சேர்த்து வைப்பதிலே மட்டும் அவைகளுக்கு ஆசை அதிகம்.

தேனீக்களின் உடம்பில் ஒருவகை மெழுகு ஊறி வரும். அந்த மெழுகினாலேயே தேனீக்கள் கூட்டைக் கட்டுகின்றன. அக்கூடுகளி லுள்ள அறைகளுக்கு ஆறு பக்கங்கள் உண்டு. அக்கூடுகளைக் கட்ட அவைகளுக்கு ஆயுதமாய் உபயோகப்படுபவை அவைகளின் தாடை களும், நாக்குகளும், கால்களுமேயாம்.

செய்யுள்:—

கருதாமற் கருமங்கள் முடிக்கவேண்டாம்

பயிற்சி:—தேனின் சுவை என்ன? எது தேனைச் சேர்க்கும்? தேனீயில் எத்தனை வகையுண்டு? இராணியின் வேலை என்ன?

32. மீன்

அரும்பதம்:—

வாழும்	ஜந்து	துள்ளி	துடித்து
கொழுப்பு	மின்னல்	நூலிழை	மின்சாரம்

மீன் தண்ணீரில் வாழும் ஜந்து. தண்ணீரிலிருந்து அதை வெளியே எடுத்தால், சில நிமிஷங்களில் துள்ளித் துடித்து இறந்து போய் விடும். அது நல்ல தண்ணீருள்ள ஆறு, குளம், குட்டைகளில் வசிக்கும். உப்பு நீருள்ள பெரிய கடலிலும் வசிக்கும். கடலில் வசிக்கும் மீன் பெரியதாயிருக்கும். குளத்திலும், ஆற்றிலும் உள்ள மீன் சிறிதாய் இருக்கும். மீன் கொழுப்பு நிறைந்திருக்கும் பிராணி. அதை மனிதர் உணவாக உட்கொள்ளுகிறார்கள்.

மீனில் பலவகை உண்டு. இங்கே சில வகைகளைத் தெரிந்து கொள்ளுவோம்.

மின்னல் மீன் என்பது ஒருவகை. அது கடலில் வெகு ஆழத்தில் வசிக்கும். அதனுடைய உடம்பில் நூற்றுக் கணக்கான புள்ளிகள் இருக்கின்றன. அவைகள் மின்னலைப் போல் மின்னிக் கொண்டிருக்கும். அந்த வெளிச்சமும் பல வர்ணங்கள் உள்ளதாக இருக்கும். மின்னல் மீனுக்கு வாயின் கீழே நூலிழை போன்ற நீளமான உறுப்பு உண்டு. அதன் உதவியால் மின்னல் மீன் வழி அறிந்து செல்லும். முதலாவது படம் மின்னல் மீன்.



மின்சார மீன் என்பது இன்னொரு வகை. அதை இரண்டாவது படத்தில் பார். இந்த மீன் மூன்றடி நீளமும் இரண்டடி அகலமும் உள்ளதாய் இருக்கிறது. இது தனக்கு உணவாகும் பிராணிகளைக் கொல்லத் தன்னிடமுள்ள மின்சார சக்தியை உபயோகிக்கிறது. இது பார்ப்பதற்கு பாம்பைப்போல் இருக்கிறது. மின்சார மீனில் ஐம்பது வகை உண்டு என்று சொல்லுகிறார்கள். இவைகள் கடலில் அதிக ஆழத்தில் வசிக்கின்றன.

மரம் ஏறும் மீன் என்று ஒரு வகை இருக்கிறது. இது குளங்களில் வசிக்கும். குளத்தில் நீர் வற்றினால் மெல்ல மெல்லச் சென்று கரையிலிருக்கும் மரத்தின்மேல் சிறிது தூரம் ஏறும்.

அதனால் உச்சிவரை ஏற முடியாது. இதை மூன்றாவது படத்தில் பார்.

செம்படவ மீன் என்பது ஒரு வகை. இந்த வகை மீனின் தலையில் இரண்டு கண்களுக்கும் இடையில் தூண்டிலைப் போல நுனியில் ஒரு உருண்டையும் இருக்கிறது. சிறு மீன்கள் அந்த உருண்டையை ஏதோ உணவு என்று கருதி அதன் பக்கத்தில் வருகின்றன. உடனே இந்தப் பெரிய மீன் அவைகளை விழுங்கி விடுகின்றது. என்ன ஆச்சரியம் பாருங்கள்! இந்த மீனைப் படத்தில் காட்டு.

மீனில், சண்டை செய்யும் மீனும் இருக்கிறது. இதை, "சையாம் தேசத்துச் சண்டை செய்யும் மீன்", என்று பெயரிட்டு அழைக்கிறார்கள். இந்த வகையிலுள்ள ஆண் மீன், கூடு கட்டி, முட்டைகளையும் குஞ்சுகளையும் பாதுகாக்கும். பெண் மீன் முட்டையிடும்; முட்டைகளைக் கூட்டில் கொண்டுபோய்ச் சேர்க்கும். அதன் பிறகு, அது விலகிச் சென்றுவிடும்.

சில சமயங்களில் பெண் மீன் தன் குஞ்சுகளையே தின்று விடுவதும் உண்டு. ஆனால், ஆண் மீன் அதை விரட்டிவிடும்.

ஆண் மீன் இன்னொரு ஆண் மீனைக் கண்டால், கோபமடைந்து, செதிள்களையும் வாலையும் விரைப்பாய் நீட்டி வைத்துக்கொண்டு சண்டைக்கு இழுக்கும். அப்போது அதன்

உடம்பு சிவப்பாயும், நீலமாயும் பிரகாசிக்கும். அந் நிறங்களைப் பார்க்கப் பார்க்க அழகாக இருக்கும்.

சண்டை ஆரம்பமாகி விட்டால், குறைந்தது மூன்று மணி நேரமாவது போர் நீடித்திருக்கும். விரோதியின் வாலையும், செதிள்களையும், உடம்பையும் கடித்துப் புண்ணுக்கி விடும். ஒன்று மற்ருென்றின் வாயில் தன் வாயை நுழைத்து, முழு பலத்தோடு கடித்துக்கொண்டு, சலிக்கும் வரை உடம்பைச் சுழற்றிச் சுழற்றிச் சண்டை செய்யும்.

உயிர் போகுமளவும் இது சண்டை செய்வதில்லை. ஏதாவது ஒன்று சலித்துப் பின் வாங்கியதும் சண்டை முடிவடைந்து விடும். அறுபட்டுப்போன வாலும், கடியுண்ட பிற உறுப்புக்களும் சில தினங்களில் வளர்ந்து, மீன் முன்போல முழு உருவத்துடன் விளங்கும்.

சிலர் இந்த வகை மீனைக் கண்ணுடிப் பாத்திரங்களில் வளர்த்து வருவதை மலாயாவில் பார்க்கலாம்.

செய்யுள் :—

புறஞ்சொல்லித் திரிவாரோ டிணங்க வேண்டாம்

பயிற்சி :— நீ இந்தப் பாடத்தில் எத்தனை வகை மீன்களைப் பற்றித் தெரிந்து கொண்டாய்? ஒவ்வொன்றையும் பற்றிச் சில வார்த்தைகள் சொல்லு.

33. வெந்நீர் ஊற்று

அரும்பதம்:—

தண்ணீர்	வெந்நீர்	சமீபம்
சுகாதார முறை	தீர்ந்துவிடும்	கொதிக்கும்
ஆவி	ஆபத்து	அசௌகரியம்
பாதுகாக்கப்படுகிறது		விடுதி

நீங்கள் பட்டணங்களில் வசிக்கிறீர்களா அல்லது தோட்டங்களில் வசிக்கிறீர்களா? பட்டணங்களில் வசிப்பவர்களுக்கு நல்ல தண்ணீர் குழாய்களின் மூலம் சுலபமாகக் கிடைக்கின்றது. சில தோட்டங்களிலும் குழாய் ஜலம் கிடைக்கின்றது. குழாய் ஜலம் கிடைக்காத தோட்டங்களும் மலாயாவில் சில இருக்கின்றன. அங்கே உள்ள ஜனங்கள் கிணறு தோண்டிக் கொள்ளுகிறார்கள். கிணற்று நீர் குளிர்ந் திருக்கும். குளிர்ந்த நீருக்குப் பதிலாக வெந் நீர் பூமியிலிருந்து ஊறி வருமா? என்ன ஆச்சரியம், பாருங்கள்.

மலாயாவில் சில இடங்களில் பூமியி லிருந்து வெந்நீர் ஊறி வருகிறது. அதை நாம் வெந்நீர் ஊற்று என்று சொல்லுகிறோம். பூமியினுள் உஷ்ணம் அதிகமாக இருக்கிறது. அந்த உஷ்ணத்தினால் கந்தகம் முதலிய பொருள்கள் உருகி தண்ணீரோடு கலந்து மேலே வருகின்றன. அரசாங்கத்தார் அதைச் சுற்றிலும் சிமென்டினால் கைப்பிடி சுவர் கட்டி

யிருக்கிறார்கள். அவ்வாறு கட்டியிருப்பதால் அது பார்ப்பதற்கு ஒரு கிணறு போல் தெரிகிறது. அதன் சமீபத்தில் சுகாதார முறைப்படி சில குளிக்கும் அறைகளையும் கட்டியிருக்கிறார்கள். ஊரிலுள்ள ஜனங்கள் அங்கே சென்று வெந்நீரை வாளிகளில் இறைத்து ஸ்நானம் செய்கிறார்கள்.

வெந்நீர் ஊற்றிலிருந்து வரும் நீர் உடம்புக்கு நல்லது. அதில் குளிப்பதால் சொறி, சிரங்கு முதலிய தோல் சம்பந்தமான வியாதிகள் தீர்ந்துவிடும்.

மலாயாவில் பல இடங்களில் வெந்நீர் ஊற்றுகள் இருந்தாலும், கோலாலம்பூருக்குப் பதினைந்து மைல் தூரத்தில் உள்ள டுசன்டுவா வெந்நீர் ஊற்று விசேஷமானது. வெந்நீர் ஊற்றில் தெளிவான கொதிக்கும் நீரையும் அதன் மேலுள்ள ஆவியையும் நாம் பார்க்கலாம். ஜனங்கள் உல்லாசமாக நீந்தி விளையாடி ஸ்நானம் செய்வதற்காக, ஊற்றிலிருந்து சிறிது தூரத்திற்கு அப்பால் வசதி செய்து வைத்திருக்கிறார்கள்.

நீண்ட சதுர வடிவில் பெரிய சுவர் நான்கு பக்கங்களிலும் கட்டப்பட்டிருக்கிறது. அதற்கு ஒரு பக்கத்தில் மட்டும் கதவு உண்டு. ஒரு பக்கத்தில் சுவரின் ஓரமாக ஐந்தாறு அறைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த அறைகளுக்குக்

கதவுகளும் பூட்டுகளும் உண்டு. அவைகளில் உட்கார ஆசனங்களும் இருக்கின்றன. அவற்றி னுள்ளே உடைகளை மாற்றி அணிந்து கொள்ள லாம். அந்த அறைகளின் பக்கத்தில் ஆழமான பெரிய தண்ணீர்த் தொட்டி சிமண்டினுல் கட்டப்பட்டிருக்கிறது. அத் தொட்டியின் அடி ஒரே மட்டமாக இல்லை. முழங்கால் அளவு ஆழத்திலிருந்து, தலைக்கு மேலே உள்ள அளவு ஆழம் வரையிலும் சரிவாகக் கட்டப்பட்டிருக் கிறது. ஆகையால், சிறு குழந்தைகளும், பெரிய மனிதர்களும் அதில் ஆபத்தும் அசௌ கரியமும் இல்லாமல் குளிக்கலாம். வெந்நீர் ஊற்றிலிருந்து பெரிய குழாயின் வழியாகத் தொட்டியில் வெந்நீர் வந்து விழுந்து கொண்டே இருக்கும். தொட்டியில் குளிப்பதற் காக வந்து விழும் நீர் சுத்தமாக இருக்கும்படி பாதுகாக்கப்படுகிறது. வேறொரு குழாயின் மூலம் தொட்டியிலுள்ள குளித்த நீரை அடிக் கடி வெளிப்படுத்தி, புதிய வெந்நீரை நிரப்பு வார்கள்.

இந்த இடத்தைச் சுற்றி நிழலைத் தரும் மரங்களும், அவற்றினடியில் சலவைக்கல் ஆசனங்களும் இருக்கின்றன. பெரிய உத்தி யோகஸ்தர்களும், பிரபுக்களும் தங்குவதற்கு அழகான விடுதிகள் சில கட்டப்பட்டிருக்கின் றன. சிற்றுண்டிச் சாலையும் அங்கே உண்டு.

விடுமுறை நாட்களில் ஜனங்கள் டுசன்டுவாவுக்குச் சென்று வெந்நீர் ஊற்றில் ஸ்நானம் செய்து சந்தோஷமடைகிறார்கள்.

செய்யுள்:—

எளியாரை எதிரிட்டுக் கொள்ளவேண்டாம்

பயிற்சி:—வெந்நீர் ஊற்று நீரில் கலந்திருப்பது என்ன? அதில் குளிப்பதால் என்ன நன்மை உண்டாகும்? டுசன்டுவா எங்கே இருக்கிறது? அதைப் பற்றிச் சில வாக்கியங்கள் எழுது. உனக்குத் தெரிந்த வேறு வெந்நீர் ஊற்றுக்கள் எவை?

34. தபாலாபீசு



அரும்பதம்:—

பொதுஜனங்கள்	நன்மை	நடைபெறுகின்றன
உதாரணம்	வரவழைக்க	
மேல் விலாசம்	உபகாரி	மார்க்கம்

இது ஓர் அழகான பெரிய கட்டடம். இது என்ன கட்டடம் தெரியுமா? இதுதான் சிங்கப்

பூரிலிருக்கும் தபாலாபீசு. ஊருக்கு ஊர் தபாலாபீசு உண்டு. உங்களுடைய ஊரிலுள்ள தபாலாபீசு எந்த வீதியில் இருக்கிறது? நீங்கள் அங்கே போனதுண்டா?

பொது ஜனங்களின் நன்மையைக் கருதி சர்க்கார் அதை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதில் என்ன வேலைகள் நடைபெறுகின்றன?

அங்கே நமக்கு மிகவும் அவசியமான வேலைகள் சுறுசுறுப்போடு நடைபெருகின்றன. முதலாவதாக, அயலூரிலிருக்கும் நம்முடைய உறவினருக்கும், நண்பருக்கும் நாம் எழுதுகிற கடிதங்களை எல்லாம் தபாலாபீசு அனுப்பி வைக்கிறது. இதை உதாரணத்தால் விளக்கு வோம்.

நீ கோலாலம்பூரில் வசிக்கிறாய் என்று வைத்துக் கொள்ளுவோம். உன்னுடைய சகோதரன் சிங்கப்பூரில் வசிக்கிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். கோலாலம்பூருக்கு அவனை வரவழைக்க வேண்டியிருக்கிறது. அதற்கு என்ன செய்வது? சிங்கப்பூருக்குச் சென்று அவனை அழைத்து வரலாம். அப்படிச் செய்தால், கோலாலம்பூரில் உன்னாலாக வேண்டிய வேலைகள் தடைப்படும். மேலும் காலதாமதமும், அதிகப் பணச் செலவும் ஏற்படும். இதற்குப் பதிலாக வேறு என்ன செய்ய லாம்? ஆம். தபாலாபீசுக்குப் போய் ஒரு

போஸ்டு கார்டு வாங்கி, அதில் உன் சகோதரனை உடனே புறப்பட்டு வரும்படியாக எழுதி, அவனுடைய மேல் விலாசத்தையும் எழுதி, தபாற் பெட்டியில் போட்டு விடலாம். அன்றைக்கே தபாலாபீசிலுள்ள உத்தியோகஸ்தர் அதை எடுத்து, ரெயில் மார்க்கமாக சிங்கப்பூருக்கு அனுப்பிவிடுவார். சிங்கப்பூரிலிருக்கும் தபாலாபீசு உத்தியோகஸ்தர் அதை உன் சகோதரனிடம் மறுநாள் கொடுத்துவிடுவார். அவனும் அதைப் பார்த்துவிட்டு, வந்து சேர்ந்து விடுவான். காரியம் நான்கு காசில் முடிந்துவிடும். தபாலாபீசு எவ்வளவு உபகாரியாய் இருக்கிறது? பார்த்தீர்களா! வேறு யார் இவ்வளவு குறைந்த பணத்திற்கு இந்த வேலையைச் செய்வார்கள்.

போஸ்டு கார்டு எழுதுவதற்குப் பதிலாகக் கடிதம் எழுதுவதும் உண்டு. அனேகமாய் எல்லோரும் கடிதம் எழுதவே முயற்சிப்பார்கள். ஏனென்றால், நாம் எழுதும் விஷயங்களை இன்னொருவர் பார்க்க விரும்பமாட்டோம் அல்லவா? நாம் எழுதும் கடிதத்தை ஒரு காகிதக் கூட்டில் வைத்து ஒட்டி விடுவோம். பிறகு மேல் விலாசம் எழுதி, தபால் முத்திரை வாங்கி கூட்டின் மேல் ஒட்டி அனுப்பிவிடுவோம்.

ஒரு கடிதத்திற்குப் பத்துக் காசு முத்திரை

வாங்கி ஒட்டவேண்டும். தபாலாபீசில் தபால் முத்திரைகள் விற்கப்படுகின்றன. ஒரு காசு, இரண்டு காசு, மூன்று காசு, ஆறு காசு, எட்டுக் காசு, பத்துக் காசு, பதினைந்து காசு, இருபத்தைந்து காசு, ஐம்பது காசு, ஒரு வெள்ளி, இரண்டு வெள்ளி, ஐந்து வெள்ளி என்று இப்படிப் பன்னிரண்டு வகையாகத் தபால் முத்திரைகள் விற்கப்படுகின்றன.

இது மட்டுமன்று. தபாலாபீசு மூலமாகத் தந்தியும் அனுப்பலாம். மலாயாவில் ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குத் தந்தி அனுப்ப பத்து வார்த்தைகளுக்கு அறுபது காசு கட்டணம் செலுத்த வேண்டும். பத்து வார்த்தைகளுக்குக் குறைந்தாலும் அறுபது காசுதான் செலுத்த வேண்டும். ஆனால், பத்து வார்த்தைகளுக்கு அதிகப்படுமானால் கூடுதலாக இருக்கும் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஆறு காசு வீதம் பணம் சேர்த்துக் கொடுக்கவேண்டும்.

தபாலாபீசின் மூலம் புஸ்தகம், துணி, முதலியவற்றைப் பார்சல் செய்து அனுப்பலாம். "பார்சல்" என்றால் ஒரு சிறு சிப்பம் என்று அர்த்தம்.

தவிரவும், 'டெலிபோன்' பேசலாம். அயலூரிலிருக்கும் ஒரு நண்பருடன் நேரடியாகப் பேச நாம் விரும்பினாலும் அப்படியே பேசலாம். அதற்கு வேண்டிய சௌகரியங்

களை சர்க்கார் நமக்குச் செய்திருக்கிறது. தபாலாபீசுகளில், வெளிப்பக்கத்தில் அலமாரியைப் போல் மரத்தால் செய்த பெரிய பெட்டி வைத்திருப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? அதனுள்ளே டெலிபோன் கருவி வைக்கப்பட்டிருக்கிறது. அதை எடுத்து நண்பருடன் பேசலாம். முதலில் தபாலாபீசிலுள்ள உத்தியோகஸ்தரிடம் நாம் பேச வேண்டிய இடத்தையும், டெலிபோன் நம்பரையும் சொல்லி, அதற்குரிய கட்டணம் எவ்வளவோ அதையும் செலுத்த வேண்டும். பின்னர், தபால் உத்தியோகஸ்தர் தம்முடைய மேஜையின்மேல் இருக்கும் டெலிபோனை எடுத்து, நாம் பேச வந்திருப்பதைத் தெரிவிப்பார். நம்முடைய நண்பர் டெலிபோன் கருவியிடம் வந்ததும், நம்மைப் பேசவிடுவார். வெளியே உள்ள அல்மாரி போலிருக்கும் பெட்டியின் திறவுகோலை நம்மிடம் தருவார். நாம் அதைத் திறந்துகொண்டு உள்ளே போய் அங்கிருக்கும் டெலிபோனை எடுத்துப் பேசவேண்டும். மலாயாவில் ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு நினைத்த நேரத்தில் டெலிபோன் பேசலாம். டெலிபோன் கட்டணம் தூரத்துக்குத் தக்கபடி வித்தியாசப்படும். ஒரு தடவையில் மூன்று நிமிஷம் மட்டும் பேசலாம்.

அயலூரிலிருப்பவர்களுக்கு தபாலாபீசு

மூலம் பணமும் அனுப்பலாம். அதற்கு 'மணியார்டர்' என்று பெயர்.

இந்தியா, சீனு, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கும் கடிதங்களும், பார்சல்களும், மணியார்டர்களும், தந்திகளும் அனுப்பலாம்.

தபாலாபீசில் பணமும் சேர்த்து வைத்துக் கொள்ளலாம்.

செய்யுள் :—

உற்ருரை உதாசினங்கள் சொல்ல வேண்டாம்

பயிற்சி :— தபாலாபீசில் என்ன வேலைகள் நடைபெருகின்றன? அயலூரிலிருக்கும் நண்பரோடு தபாலாபீசிலிருந்து எப்படி டெலிபோனில் பேசுவாய்? தந்தி சொல்ல எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும்?

35. விடுகதை

1. சட்டையைக் கழற்றி சட்டென்று குதித்தான்.

—வாழைப்பழம்.

2. நோயுமில்லை, நொடியுமில்லை, தொட்டவுடன் பட்டுக்கிடக்கிருள், பாவி மகள்.

—தொட்டாச்சிணுங்கி.

3. நான்கு மூலைச் சதுரம், நந்தவனத் தோட்டம், குதிரைக் குட்டி ஓட்டம்.

—அம்மி, குழவி.

147176

4. நாலுலக்கை குத்திவரும், ஒரு உலக்கை உலாவிவரும், இரண்டு முறம் புடைத்து வரும், இராஜாமகன் ஏறிவரும்.

—யானை.

5. சாய்ந்த மலையோரம் சம்பந்திமார் இரண்டுபேர், அவர்கள் பேசுவது மில்லை தொடுவது மில்லை.

—கண்கள்.

6. பண்ணைக்கும் பட்டிக்கும் நடக்கக் கெட்டிக்காரி, பால் கொடாமல் பிள்ளை வளர்க்கும் கைகாரி.

—கோழி.

TB
031(37)
N56-

2330

Ramanujachariar's Knowledge Reader III—Annas 12.